பக்கங்கள் : பதினாறு

Registered as a Ne

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை14 சனிக்கிழமை (29.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:003

# பிரபாவின் அழைப்பை இந்தியா கணக்கில்கூட எடுக்காதாம்

## இலங்கை அரசின் உறுதியான நம்பிக்கை இது

கொழும்பு, நவம்பர் 29



இந்தியாவுடன் மீண்டும் உறவை ஏற்படுத் ந புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விடுத்திருக்கும் அழைப்பை இந்தியா கணக்கில் கூட எடுக்காது என இலங்கை அரசு உறுதியாக நம்புகிறது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம நேற்று நாடாளுமன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை மீண்டும் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.29

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச் சுடர் உள்ளே**

க.பொ.த.ப(சா) பரீட்சை

★தமிழ்மொழியும் இலக்கியமும் I -II -III

## விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா அரசு நீக்கும் சாத்தியம் உண்டா?

புதுடில்லி, நவ.29

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்கும் எண்ணம் எதுவும் இந்தியாவிற்கு இல்லையென அந்த நாட்டின் உள்துறை அமைச்சு வட்டாரங்களை மேற் கோள் காட்டி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.

விடுதலைப்புலிகளின் தலைவர் தனது மாவீரர் தின உரையில் விடுத்த வேண்டுகோள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மக்கள் பெரும் அச்சத்தில் கொலைகளை நிறுத்த உடன் நடவடிக்கை தேவை

### ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை வலியுறுத்து

கொழும்பு, நவ. 29

கிழக்கு மாகாணத்தில், மிகக் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நாளாந் தம் கொலைகள் அதிகரித்து வருகின்றன. அங்கு மக்கள் அச்சத்தில் வாழ்கின்றனர். இந்த நிலையை மாற்ற சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை.

இந்த கொலைகளுக்கு ஆயுதக் குழுக்களே காரணம் என்று அவர் கூறினார்.

கிழக்கு மகாணத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அங்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மும்பையில் தாக்குதல்களை நடத்தியவர்கள் கராச்சியில் இருந்து வந்த தற்கொலைக் குண்டுதாரிகள்

மும்பை, நவ. 29

மும்பையில் கடந்த புதன்கிழமை அடுத்தடுத்து ஒன்பது இடங்களில் குண்டுத் தாக்குதல்களை நடத்தியும் பிரபல ஹோட்டல்களில் தங்கியிருந்தவர்களை பணயக் கைதிகளாகப் பிடித்தும் கொடூரம் புரிந்தவர்கள்- பாகிஸ்தானின் கராச்சி நகரில் இருந்து வந்த லஷ்கர் இ தொய்பா தீவிரவாத இயக்கத்தில் இருந்து பிரிந்த பத்துக் குழுக்களில் ஒன்றைச் சேர்ந்த தற்கொலை குண்தாரிகள்.

இந்தத் தகவலை நேற்றிரவு இந்தியக் கொமாண்டோ அணியிரால் பிடிக்கப்பட்ட மூவர்களில் ஒருவரான அக்மல் அமீர்கமால் தெரிவித்திருக்கிறார்.

உயிர் தப்ப இயலாது என்பதை உணர்ந்த தீவிரவாதிகள் தாஜ்,ஒபரோய் ஹோட்டலின் மேல் தளத்தில்கையெறி குண்டுகளை வீசியபடி இருந்தனர். இதனால்2 ஹோட்டல்களும் தீப்பிடித்து எரிந்தன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பொத்துவில் பகுதியில் தாக்குதல் படைத் தரப்பில் மூன்று பேர் பலி

அம்பாறை, நவ.29

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பகுதியில் சிறப்பு அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர் என அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர் என்று இணையத்தளம் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

பொத்துவில் வனப்பகுதியில் நேற்று

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு கொலைகளைக் கண்டித்து மட்டக்களப்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, நவ.29

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தொடரும் ஆள்கொலைகளைக் கண்டித்தும் மக்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரியும் நேற்றுமட்டக்களப்பு நகரில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிச் சபைத் தலைவர்கள் மற்றும் உறுப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலிருந்து 20 உணவு லொறிகள் நேற்று கிளிநொச்சியைச் சென்றடைந்தன

வவுனியா, நவ.29

வவுனியா அரச உணவுக் களஞ்சியத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் தரித்து நின்ற 20 லொறிகளும், நேற்று கிளிநொச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் மேற்பார்வையில் கடந்த திங்கட்கிழமை 20 லொறிகளில் ஏற்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இராணுவத் தீர்வு மட்டும் போதாது!

### நாடாளுமன்றில் ரணில் விளக்கம்

கொழும்பு, நவ.29

''பயங்கரவாதத்தை இராணுவத் தீர்வால் மாத்திரம் ஒழித்துக்கட்ட முடியாது. பயங்கரவாதத்தின் வடிவமைப்புக்கு ஏற்ப அரசியல், பொருளாதாரம், சமூகம் போன்றவற்றால் அதை ஒழிக்க வேண்டும்''

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் மும்பை குண்டுவெடிப்புச் சம்பவத்தைக் கண்டித்து உரையாற்றுகையில் கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-



உலகில் பயங்கரவாதம் வெவ்வேறு வடிவங்களில் உள்ளன. அது வெவ்வேறு விதமாகத் தோற்கடிக்கப் பட்டிருக்கிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 20 ஆண்டுகளின் பின்னர் கொலை வழக்கில் யாழ். நீதிமன்றம் மரண தண்டனைத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ.29

யாழ். நீதிமன்றத்தினால் 20 வருடங்களின் பின்னர் கொலை வழக்கு ஒன்றில் அதில் சம்பந்தப்பட்ட எதிரிக்கு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மேல் நீதிமன்றத்தில் கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணை முடிவில் மரணதண்டனைத் தீர்ப்பை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா நேற்று வழங்கினார்.

காரைநகர், பயிற்றங்கூடல் என்னும் இடத்தைச் சேர்ந்த பேக்கரி உரிமையாளரான மகாலிங்கம் தேவநாயகம் என்பவருக்கே

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பதவி இழந்தார் பௌஸி அஸந்த டி மெல்லும் இடைநிறுத்தம்

### பெற்றோல் விவகாரத்தில் நீதிமன்று இடைக்கால உத்தரவு

கொழும்பு, நவ.29

பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸியையும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் அஸந்த டி [illegible] அவர்களின் பதவிகளில் இருந்து உடனடியாக இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் நேற்று இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரி

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

## மண மங்கல நல்வாழ்த்துக்கள்

இன்று (29.11.2008) சனிக்கிழமை
திருமண பந்தத்தில் இணையும்



திருவளர்ச் செல்வன்
M.C சுரேந்திரா
(சமூக சேவை உத்தியோகத்தர்
பிரதேசசெயலகம், பருத்தித்துறை)

திருவளர்ச் செல்வி
சோபனா

புதுமணத் தம்பதிகளை சகல
செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு
காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.
N.C.A கல்வி நிலையம், பருத்தித்துறை.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 30.10.2008 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு



திருமதி
சதானந்தாம்பிகை இராசசுந்தரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.11.2008) சனிக்கிழமை காலை 5.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து மதியம் 12 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

'நன்றி'

உண்டுவத்தை, அல்வாய் தெற்கு,
அல்வாய்.

குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வ பிரம்மணே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 31.10.2008 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்ப விளக்கு

திருமதி பரமேஸ்வரி தங்கராசா

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (30.11.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சித்தம்பாதி, கரணவாய்,
கரவெட்டி.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவு



மலர்வு 06.11.1938
உதிர்வு: 11.12.2007

அமரர் மகேஸ்வரி
சிவசுப்பிரமணியம்
(பேபி அக்கா)
திதி: 29.11.2008

ஆண்டொன்று ஆகியும் ஆறுதலின்றி
ஆழி அலையாய் மனம் குமுறுகின்றதம்மா



'சிவஸ்தான்'
தச்சனோடை,
புலோலி தெற்கு, புலோலி.

உங்கள், மறைவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மனித உரிமைகள் தின பேச்சுப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், நவ.29

மனித உரிமைகள் தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கிடையே இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த பேச்சுப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி எஸ்.சிவராஜசிங்கம் அறிவித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தினால் இன்று நடத்தப்படவிருந்த இந்தப் பேச்சுப் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாகவும், போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (50)

## நெல்லியடியில் இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.29

யாழ். நகர் மைய றோட்டறக் கழகத்தினால் எச்.என்.பி. நெல்லியடி கிளையின் அனுசரணையுடன் சாதாரண தர மாணவர்களுக்கான கணிதபாடக் கருத்தரங்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று காலை 9.30 மணிக்கு நடத்தப்படும். இதில் அனைத்து மாணவர்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

## தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியைச் சேர்ந்த அரணி சிவபாலசுந்தரம் என்பவரது தே.அ.அட்டை இல. (887791082V) மற்றும் வி.அ.அட்டை இல. (0903039551) ஆகியவை கடந்த 25.11.2008 திகதியன்று உரும்பிராய் சந்திக்கும் கற்பகப்பிள்ளையார் கோயிலடிக்கும் இடையில் மினிவானில் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் தயவுசெய்து அம்பிகா ஸ்ரோர்ஸ், உரும்பிராய் கிழக்கு என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

யா/இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்

30.11.2008 கல்லூரியில் நடைபெற இருந்த பரிசளிப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதிபர், இராமநாதன் கல்லூரி.


## எம்புறோடிங் ரை



நீண்டகால பாவனைக்கு உத்தரவாதம்
பாடசாலை மாணவர்களுக்குரிய ரை

எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்
212, கோயில் வீதி, T.P.021 222 9607 நல்லூர்


## நகைகள் அடகுவைத்தவர்கள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், நவ.28

இலங்கைவங்கியின் அடகு நகை ஏல விற்பனை நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். மேற்தரக் கிளையில் இடம்பெறவுள்ளது.

அடகு வைத்தவர்கள் தற்போதைய அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்டிருந்தால், அடகு வைத்த கிளையின் முகாமையாளருடன் அல்லது உதவிப் பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டால் மாற்று வழி செய்துதரப்படும் என்று வடபிராந்திய பொது முகாமையாளர் தெரிவித்தார். (1)

## அந்தியேட்டி அழைப்பு



மண்ணுக்கு: 06.06.1936
விண்ணுக்கு: 31.10.2008

கணபதிப்பிள்ளை
சோமசுந்தரம்

எங்கள் குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் நாளை (30.11.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பூனியனடி,
உடுப்பிட்டி.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

திருமதி புவனேஸ்வரி இராஜரட்ணம்

கீரிப்பல்லி, கரணவாய் கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜரட்ணம் புவனேஸ்வரி 25.11.2008 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் செல்லையா - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் செல்லையா இராஜரட்ணம் (ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட்)இன் அன்பு மனைவியும் ஸ்ரீதரன் (இயந்திரவியல் அத்தியட்சகர், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்), பாஸ்கரன் (காசாளர், வாழைச்சேனைப் பிரதேச செயலகம்), முரளிதரன் (அபிவிருத்தி உத வியாளர், சாவகச்சேரி பிரதேச செயலகம்), வித்தியா (விவசாயப் பரிசோதகர், பொலனறுவை), கோணேஸ்வரன் (தேர்தல் திணைக்களம், மட்டக்களப்பு மாவட்ட செயலகம்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற புஸ்பாதேவி (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) மற்றும் மேனகா (சமுர்த்தி முகாமையாளர்), தனுஷியா (ஆசிரியை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), சமன் ஆகியோரின் அன்பு மாமியும் புஸ்பகரன், ஹரீஸ், அபியங்கா, அபிஷேகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கீரிப்பல்லி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(சி/555764)

தகவல்:
குடும்பத்தினர்.

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஆறுமுகம் சண்முகநாதன்
(இளைப்பாறிய முகாமையாளர் - மக்கள் வங்கி)



மலர்வு - 10.09.1939
உதிர்வு - 27.11.2000

ஆண்டு எட்டு ஆகியதோ அப்பாவே! நீர் பிரிந்து
ஆறவில்லை எம்துயரம் அழுதழுது நிற்கிறோம்
மீண்டும் நீர் வருவீரோ மிகை மகிழ்வு தாரீரோ!
இராணுவ வாகனத்தில் ஏறிவந்த காலனவன்
உம் இன்னுயிர் கவர்ந்தானோ, மாறுகுதோ எம்மனது

இல.30, விவேகானந்தா றோட்,
வெள்ளவத்தை, கொழும்பு.

பிரிவால் துயருறும்: மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர் (ஆ.தேவராஜா).

## மரண அறிவித்தல்



திருமதி சரஸ்வதி குணம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி குணம் நேற்று (28.11.2008) வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு குணம் அவர்களின் அன்பு மனைவியும் ஜெயபாலன் (ஹொலண்ட்), புஸ்பலதா, ஜெயராஜன் (ஜேர்மனி), ஜெயரட்ணம் (கனடா), பிறேமலதா, ஜெனிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சக்ளின் (ஹொலண்ட்), பத்மநாதன் (ஆசிரியர், வசாவிளான் குட்டியப்புலம் அ.த.க.பாடசாலை), இசைஞானவதனி (ஜேர்மனி), லலிதாம்பிகை (கனடா), இரவீந்திரன் (ஆங்கில ஆசிரியர்), உஷந்தி ஆகியோரின் அன்பு மாமியும் பாலசிங்கம், இராசமணி, இராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெனி, ஜெமிலா, பிரயன் (ஹொலண்ட்), பிரவிந்தா, நிரோஜன், பிரபாலினி, ஹரி, சுரதி (ஜேர்மன்), பமீஷன், தேனுஜா (கனடா), நிருத்திஹா, பிரவீன் ஜோதீபன், திருதனன் , கார்த்தீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.11.2008) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தெற்கைப் போர்த் தீவிரத்தில் ஆழ்த்தும் கருத்துருவாக்கிகள்

பௌத்த - சிங்களப் பேரினவாதத்துக்குள் புதைந்து கிடக்கும் தென்னிலங்கைச் சிங்களம், சிறுபான்மையினராக அடக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு, அவல வாழ்வுக்குள் தள்ளப்பட்டிருக்கும் தமிழினத்தின் நீதியான - நியாயமான - அபிலாஷைகளைப் புரிந்துகொள்ளப் போவதில்லை என்பது தெளிவு.

அப்படி சிறுபான்மையினரின் நியாயமான அபிலாஷைகளைத் தென்னிங்கை மக்களைப் புரிந்துகொள்ள விடாமல் தடுத்து, பேரினவாத மிதப்புடன் கூடிய மாயைக்குள் - ஒரு திமிர்ச் செருக்குப் போக்குக்குள் - அவர்களை வைத்திருக்கும் கைங்கரியத்தை அறிவார்ந்த சிங்களத் தரப்பு வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றது.

இலங்கை இனப்பிரச்சினை தீர்க்கப்பட முடியாத நீண்டகால இழுபறியாக நீடிப்பதற்கு, இவ்வாறு உண்மைகளையும் யதார்த்தங்களையும் தென்னிலங்கை மக்கள் புரிந்து கொள்ள முடியாதவாறு இனவாத வலைப் பின்னலுக்குள் அவர்களை சிக்க வைத்திருக்கும் தென்னிலங்கை ஊடகத் தரப்பு உள்ளிட்ட படித்த வர்க்கமே பிரதான காரணமாகும்.

சிங்கள, பௌத்த பேரினவாதம் தென்னிலங்கையின் தேசிய சித்தாந்தமாக இன்று வியாபித்து நிற்கையில் சிங்களத்தின் மூளையத்தை அந்தக் கருத்தாதிக்கமே சிறைப்பிடித்து வைத்திருக்கிறது. சிங்களத்தின் மனவமைப்பில் ஆழமாகப் பொறிக்கப்பட்டுள்ள இந்த இனவெறித் திமிர், சிறுபான்மையினர் தரப்பு நியாயங்களைப் புரிந்துகொள்ளவிடாது சிங்களத்தை மறைத்து நிற்கின்றது.

இந்தத் தடவை புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாவீரர் தின உரை குறித்துத் தென்னிலங்கை ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளும், திரிப்பு வேலைகளும் கூட இவ்வாறு சிங்களத்தின் மனவமைப்பைத் திசை திருப்பும் எத்தனங்கள்தாம்.

வழமையாக தமது மாவீரர் தின உரையில் சில விடங்களையப் புலிகளின் தலைவர் பொதுவாகக் கூறுவது உண்டு. இவ்விடயத்தில் தமது இயக்கத்தின் கொள்கை நிலைப்பாட்டை இவ்வாறு திரும்பத் திரும்ப அவர் வலியுறுத்துகின்றமை புதுமையானதல்ல.

*நாங்கள் சமாதான விரோதிகள் அல்லர்; யுத்த வெறியர்களும் அல்லர்.

*அமைதிப் பேச்சுக்கும், சமாதான வழித் தீர்வு முயற்சிகளுக்கும் நாம் எப்போதும் தயார்.

*யுத்தத்தை நிறுத்தி சமாதான வழியில் தீர்வுகாண நாங்கள் காத்திருக்கின்ற போதிலும், இந்த யுத்தத்தை சிங்கள அரசுதான் எம்மீது வலிந்து திணித்துள்ளது.

-இது போன்ற கருத்துக்களை கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகவும் தனது மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் வெளிப்படுத்தியே வந்துள்ளார். இவை புதுமையானவை அல்ல.

ஆனால் முன்னரெல்லாம் இக்கருத்தை - சமாதான வழித் தீர்வுக்கான தனது விருப்பை - பிரபாகரன் வெளியிட்டபோது அவற்றை தென்னிலங்கை ஊடகங்கள் முன்னிலைப்படுத்தி பிரசுரிப்பதில்லை.

மறுபக்கத்தில் யுத்தத்துக்கும் தாங்கள் தயார் என்ற ரீதியில் பிரபாகரன் கூறும் கருத்தையே முன்னிலைப் படுத்தி, யுத்தத்துக்கான மோச சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பதிலேய அவை கண்ணும் கருத்துமாக இருந்து வந்தன.

இந்தத் தடவையும் கூட பிரபாகரன் இந்த இரண்டு பக்கக் கருத்துக்களையுமே வெளியிட்டிருக்கின்றார்.

*"தவிர்க்க முடியாத தேவையின் நிர்ப்பந்தமாக ஆயுதப் போராட்டத்தை வரித்துக்கொண்ட போதும், நாம் எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்குப் போரை நிறுத்தி. அமைதி வழியில் தீர்வு காணவே விரும்புகிறோம்.*

*இதற்கு எமது விடுதலை இயக்கம் என்றுமே தயாராக இருக்கிறது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு என்றுமே எதிரானவர்கள் அல்லர்."* - என்று கூறியுள்ள பிரபாகரன் வேறு ஒரு விடயத்தையும் சொல்லியிருக்கின்றார்.

*"இன்றைய சவால்கள் எவையும் எமக்குப் புதியவையும் அல்ல, பெரியவையும் அல்ல. இந்தச் சவால்களை நாம் எமது மக்களின் ஒன்று திரண்ட பலத்துடன் எதிர்கொண்டு வெல்வோம்."* - என்றும்

*"தமிழரின் சுதந்திர இயக்கம் என்ற வகையில், நாம் எமது மண்ணில் சிங்கள ஆக்கிரமிப்பிற்கோ, சிங்கள ஆதிக்கத்துக்கோ என்றுமே இடமளிக்கப் போவதில்லை. எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும், எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும், எத்தனை சக்திகள் எதிர்த்து நின்றாலும், நாம் தமிழரின் சுதந்திர விடிவுக்காகத் தொடர்ந்து போராடுவோம். வரலாறுவிட்ட வழியில், காலம் இட்ட கட்டளைப்படி, சிங்கள ஆக்கிரமிப்பு அகலும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்."* - என்று கூறியிருக்கின்றார் பிரபாகரன்.

இப்படித் தம் மீது திணிக்கப்பட்ட யுத்தத்தை எதிர்கொள்ளவும் தயார், அதை நிறுத்தி அமைதி வழியில் - சமாதான நெறியில் - தீர்வு காணவும் தயார் என இரண்டு பக்கக் கருத்துகளையும் பிரபாகரன் ஒவ்வொரு மாவீரர் தினச் செய்தியிலும் தெரிவித்து வருகையில் -

இவ்வளவு காலமும் அச்செய்திகளில் அவர் வெளியிட்டு வந்த சமாதான அழைப்புப் பற்றிய தகவலை முன்னிலைப் படுத்தாமல் புறமொதுக்கி வந்த தென்னிலங்கை ஊடகங்கள் இந்த முறை மட்டும் அதைத் தூக்கிப் பிடித்து "யுத்தத்தை நிறுத்தக் கோருகிறார் பிரபாகரன்" எனவும், "யுத்தத்தை நிறுத்த விரும்புகிறார் பிரபாகரன்" எனவும் தலைப்பிட்டுச் செய்திகள் பிரசுரித்திருக்கின்றன.

புலிகளை அடியோடு அழித்தொழித்து, இல்லாமல் செய்யும் இராணுவ நடவடிக்கைகளில் அரசுப் படைகள் வெற்றிகரமாக நடைபோடுகின்றன என்ற எண்ணம் நீடிக் கையில் -

வேறு வழியின்றி யுத்தத்தை நிறுத்த பிரபாகரன் கெஞ்சுகின்றார் என்ற மாயை நிலையை உருவாக்கவும் -

அதன் மூலம் வெற்றி உறுதி என்ற நம்பிக்கையில் முழுப் போர்த் தீவிரத்தில் தென்னிலங்கையை உற்சாகப்படுத்தித் தமிழர் தாயகத்துக்கு எதிரான அந்தப் போரில் தெற்கை முழு மூச்சில் ஈடுபட வைப்பதுமே இத்தகைய திரிப்புச் செய்திகளின் பின்புலமாகும்.

தெற்கில் கருத்துருவாக்கிகளான ஊடகங்கள், பிரபாகரன் சுட்டிக்காட்டுவது போன்று இவ்வாறு போரியல் தீவிரத்தில் சிங்களத்தை மூழ்கடித்திருக்கும் போது அமைதி வழித் தீர்வு சாத்தியமற்றதே.

# யாழ். நகரப் பகுதிக்குள் 18 உப நிலையங்களில் மின்விநியோகம் நேற்று சீரடைந்தது

## ஏனைய பகுதிகளுக்கும் விரைவில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்.நகரப் பகுதிக்குள் 18 உப மின் நிலையங்களில் மீண்டும் மின் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளுக்கான மின்விநியோகம் அடுத்துவரும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படும் எனவும் தென்மராட்சிப் பகுதியில் உயர் அழுத்த மின் கடத்திகள் கடும் சேதமடைந்துள்ளமையால் அப்பகுதிக்கான மின்நிவியோகத்தில் சிறிது தாமதம் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார். அத்துடன் பண்ணைப்பாலம் சேதமடைந்துள்ளமையால் ஊர்காவற்றுறைப் பகுதிக்கான சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளமுடியாதுள்ளதெனவும் அவர் கூறினார்.

இது தொடர்பாகத் தகவல்தருகையில் அவர் கூறியவை வருமாறு:-

இந்தக் கடுங்காற்று, மழை காரணமாக மின்சாரசபைக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அவை தற்போது சீர்செய்யப்பட்டு வருகின்றன.

யாழ்.நகரப் பகுதிக்குள் ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, கே.கே.எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதி, மனோகராச் சந்தி, தட்டாதெரு, கச்சேரி, யாழ். பல்கலைக்கழகம், நாவாந்துறை, கொட்டடி, திருநெல்வேலி, தாவடி, கோம்பயன்மணல் ஆகிய இடங்களுக்கான உப மின் நிலையங்கள் ஊடாக மின் விநியோகம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ். நகரப் பகுதியில் ஏனைய உப மின் நிலையங்களுக்கான விநியோகப் பணிகள் அடுத்த சில தினங்களில் ஆரம்பிக்கப்படும்.

பருத்தித்துறையில் 11 உப மின் நிலையங்களிலும், சுன்னாகத்தில் 8 உப மின்நிலையங்களிலும், யாழ்ப்பாணச் சுற்றுப்புறத்தில் 6 உப மின் நிலையங்களிலும் மின் விநியோகம் ஆம்பிக்கப்பட்டுள்ளது. வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளுக்கானமின் விநியோகமும் அடுத்த சில தினங்களில் சீரடைந்துவிடும். தென்மராட்சிக்கான உயர் அழுத்த மின்கடத்திகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. அவற்றைச் சீர்செய்ய சிறிது காலம் பிடிக்கும். எனினும் அடுத்த மாதம் அது சீரடையும் என்று நம்பிக்கை தெரிவித்தார் உயர் அதிகாரி. (50)

# சங்கக்கடைகளுக்குள் வெள்ளம் சீனியும் மாவும் நனைந்துள்ளன

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் சிலவற்றுக்குள் மழை வெள்ளம் புகுந்தமையால் அங்கிருந்த அத்தியாவசியப் பொருள்கள் சேதமடைந்துள்ளதாகச் சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

இதனால் சங்கத்துக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சங்கத்தின் கிளைகள் பலவற்றில் இருந்த அத்தியாவசியப் பொருள்களான அரிசி, மா, சீனி மற்றும் சில்லறைப் பொருள்கள் வெள்ளம் உட்புகுந்தமையால் நனைந்துள்ளன. இதனால் அவை பொதுமக்களின் பாவனைக்கு விநியோகிக்க முடியாத நிலையில் சேதமடைந்துள்ளதாக தலைவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் யாழ். ப.நோ.கூ.சங்க தலைமையகத்தின் கூரையும் காற்றினால் பலத்த சேதமடைந்ததாகவும் அவர் கூறினார்.

இதேவேளை-

குடாநாட்டின் ஏனைய இடங்களிலும் சில ப.நோ.கூ.சங்கக்கிளைகளில் வெள்ளம் புகுந்தமையால் பொருள்கள் சேதமடைந்ததாகவும் பிரதேச செய்தியாளர்கள் தெரிவித்தனர்.(50-86-224)

# கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.29

தென்மராட்சிக் கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (202)

# குடாநாட்டைக் கலங்கடித்த புயலின் பெயர் 'நிஷா'

கடந்த சில நாள்களாகக் கடும் மழையோடு சேர்ந்து, குடாநாட்டை ஆட்டிப் படைத்த புயலுக்கு 'நிஷா' என்று பெயரிடப்பட்டிருப்பதாகத் திருநெல்வேலியில் அமைந்துள்ள வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் வங்கக்கடலில் உருவாகின்ற புயல்களால் உண்டாகும் பக்க விளைவுகளே குடாநாட்டைத் தாக்கியுள்ளன. ஆனால் வானிலை அவதான நிலையப் பதிவுகளின்படி, வரலாற்றில் முதல்முறையாக யாழ்ப்பாணத்துக்கு மேலேயே உருவாகி குடாநாட்டில் மையங் கொண்டு நேரடியாகத் தாக்கிய புயல் 'நிஷா'தான் என்று அவதான நிலைய வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (04)

# கைத்தொலைபேசிகளும் கைவிட்டன!

கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத கதைதான் குடாநாட்டிலுள்ள கைத்தொலை பேசிப் பாவனையாளர்களுக்கு நிகழ்ந்திருக்கின்றது.

இதுநாள் வரையும் அதிக பாவனையாளர்களைக் கொண்ட ஒரு கைத்தொலைபேசி நிறுவனத்தின் தொடர்பாடல் சமிக்ஞைகள் சீரற்ற தன்மையுடனேயே கிடைத்து வந்தன.

எனினும் தற்போது சீரான தொடர்பாடல் சமிக்ஞை கிடைக்கின்ற போதும், கடந்த நான்கு நாள்களாக மின்சாரம் இல்லாததால் கைத்தொலைபேசிகளின் 'பற்றறி'கள் செயலிழந்து விட்டன.

பெருமழையோடு குடாநாட்டின் 'கேபிள்' தொலைபேசி இணைப்புகள் பலவும் சேதமடைந்த நிலையில், கைத்தொலைபேசிகளும் கைவிட்டதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகினர்.

இதேவேளை சில இடங்களில் மின்பிறப்பாக்கிகள் மூலம் கைத்தொலைபேசிப் பற்றறிகளுக்கு மின்னேற்றுவதற்கு ரூபா 50 முதல் ரூபா 60 வரை அறவிடப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது. (04)

# திருத்தப்பட்ட நேர அட்டவணைப்படி ஆண்டிறுதிப் பரீட்சைகள்

கரவெட்டி, நவ.29

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் திருத்தப்பட்ட நேர அட்டவணைக்கு அமைவாக ஆண்டிறுதிப் பரீட்சைகள் இடம்பெறும் என்று வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் பரீட்சைகள் நடைபெறும் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.(203-70)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 15: 30.11.2008 | |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | திருதியை பி.இ.04.49வரை |
| நட்சத்திரம்: | மூலம் பி.ப.01.43 வரை |
| [illegible]: | 09.14 - 10.44 |
| ராகுகாலம்: | 04.44 - 06.14 |

# வங்கிகள் வழமைக்கு

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்.நகரப் பகுதியில் வங்கியின் செயற்பாடுகள் நேற்று முதல் வழமைக்குத் திரும்பின. இதனையடுத்து வங்கிகளில் நேற்று சனக்கூட்டம் அதிகமாயிருந்தது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பெய்த கடும் மழை புயல்காற்றுக் காரணமாக மின் விநியோகம் தடைப்பட்டமை யால் அனைத்து வங்கிகளின் செயற்பாடுகள் முற்றாக முடங்கியிருந்தன. சில வங்கிக் கிளைகளுக்குள் வெள்ளம் புகுந்தமையால் சேதங்கள் ஏற்பட்டன. அத்துடன் சில கிளைகளில் பணப் பரிமாற்று இயந்திரங்களும் (ATM) பழுதடைந்தன.

நேற்று முன்தினம் மாலை யாழ். நகரின் சில பகுதிகளுக்கான மின் விநியோகம் சீரடைந்ததையடுத்து நேற்று வங்கிகளின் செயற்பாடுகள் வழமைக்கு திரும்பின. எனினும் சில வங்கிகளில் தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திரங்கள் செயற்படவில்லை. குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் நேற்று வங்கிகளின் செயற்பாடுகள் ஓரளவு வழமைக்குத் திரும்பியதாக உதயனின் பிரதேச செய்தியாளர்கள் தெரிவித்தனர். (50)

# யாழ்ப்பாணத்தில் எரிபொருள் தட்டுப்பாடு நேற்று முதல் ஓரளவு நீங்கியது

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்.நகரப்பகுதி உட்படக் குடாநாட்டின் பல இடங்களிலும் நேற்று முதல் எரிபொருள் விநியோகம் ஓரளவு வழமைக்குத் திரும்பியது. பொது மக்கள் தமது வாகனங்கள் மற்றும் இதர தேவைகளுக்கென நேற்றுக் காலை முதல் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்தமையைக் காண முடிந்தது.

குடாநாட்டில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்த மழை நேற்று முன்தினம் ஓய்ந்ததையடுத்து எரிபொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

மின் விநியோகம் தடைப்பட்டமை, எரிபொருள் நிரப்பு நிலையங்களின் தாங்கிகளுக்குள் மழை வெள்ளம் உட் புகுந்தமை காரணமாக அவை மூடப்பட்டிருந்தன. இதனால் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

பெற்றோல் லீற்றர் 250 ரூபா வரையும், மண்ணெண்ணெய் லீற்றர் 150 ரூபா வரையும் கடைகளில் விற்பனை செய்யப்பட்டன. மக்கள் அதிகவிலை என்றும் பாராமல் இவற்றை முண்டியடித்துக்கொண்டு கொள்வனவு செய்தனர்.

எனினும் யாழ். நகரப் பகுதியில் சில இடங்களுக்கான மின் விநியோகம் நேற்று வழமைக்குத் திரும்பியதையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையங்கள் திறக்கப்பட்டு எரிபொருள் விநியோகம் நடைபெற்றது. அதேபோன்று குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் திறக்கப்பட்டு விநியோகம் நடைபெற்றது. இதனால் எரிபொருள்களுக்கான தட்டுப்பாடு ஓரளவு நீங்கியது.

யாழ்.ப.நோ.கூ.சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்றுக்காலை முதல் பெற்றோல், மண்ணெண்ணெய் என்பன போதியளவில் விநியோகிக்கப்பட்டன எனவும், டீசல் தாங்கிக்குள் வெள்ளம் புகுந்த காரணத்தால் டீசல் விநியோகம் நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் யாழ்.வின்சர் சந்தியில் அமைந்துள்ள 'மாக்பெட்' எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்று விநியோகம் நடைபெற்றது. மாக்பெட் நிலையத்தின் டீசல், பெற்றோல் தாங்கிகளிலும் வெள்ளம் புகுந்ததாகவும் பின்னர் அது பிரித்தெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-224-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு மலேஷியா பாதுகாப்பளிக்கவேண்டும்

## அந்நிய தொழிலாளர் உரிமைக்குழு இயக்குநர் வலியுறுத்து

கோலாலம்பூர், நவ. 29

''மலேஷியாவில் குடியேறியுள்ள வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கும் தக்க பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும். குறிப்பாக வெளிநாட்டுப் பணிப் பெண்களுக்கு நல்ல பாதுகாப்பு தேவை.''

-இவ்வாறு மலேஷிய அந்நிய தொழிலாளர் உரிமைக் குழுவான தெனாகானித்தாவின் இயக்குநர் ஐரின் பெர்னாண்டஸ் பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஐரின் பெர்னாண்டஸ் தமது தெனாகானித்தா அலுவலகத்தில் மலேஷியா கினி சஞ்சிகைக்கு இப்பேட்டியை அளித்துள்ளார். அவர் தம் பேட்டியில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

''வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து குடியேறியுள்ள தொழிலாளரும் மனிதர்கள் தாம். நம்மைப் போன்றே அவர்களுக்கும் அனைத்து உரிமைகளும் உண்டு. நல் வாழ்க்கையைத் தேடித்தான் அவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். இந்நாட்டிலிருக்கும்போது அவர்களைக் காக்கும் பொறுப்பு எமக்குண்டு.

''அவர்களில் சிலர் இந்நாட்டிலிருந்து ஒழித்துக்கட்டப்பட்டதாகக் கூறப்படும் அடிமைத்தனத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். குடியேறி வருவோரின் நலன் காக்க முடியாவிட்டால் அவர்களை இங்கு அழைத்துவரும் உரிமை எமக்கு இல்லை.''

''இப்போது வரும் தொழிலாளர்களையும் கடந்த நூற்றாண்டில் பிரிட்டிஷ் காலனித்துவம் இந்தியா மற்றும் சீனாவிலிருந்து கொண்டுவந்த தொழிலாளர்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். முன்னையவர்களை பிரிட்டிஷ் காலனித்துவவாதிகள் தோட்டப்புறங்களில் மலிவான தொழிலாளர்களாக பயன்படுத்திக்கொண்டார்கள். இப்போது நாம் இவர்களைப் பயன்படுத்திக்கொள்கின்றோம். அப்போது வந்தவர்கள் ஓரங்கட்டப்பட்டார்கள். அந்நிலை அவர்களின் வழித்தோன்றல்களாகிய எமது மனதில் இன்னும் நினைவில் உள்ளது.''

''வரலாறு இப்போது திரும்புகிறது. என் பெற்றோர் பட்ட துயரங்களை நான் அறிவேன். இதற்கு எதிராக இப்போது நாம் குரல் கொடுக்காவிட்டால், அதே அடக்குமுறையில் அரசாங்கத்திடம் நம் பிள்ளைகளும் துன்பப்படுவர்.''

''1995 இல் தடுப்பு முகாம்களில் அதிகார மீறல், சித்திரவதை, மனிதாபிமானமற்ற சூழல்' என்னும் தலைப்பில் நான் வெளியிட்ட அறிக்கையொன்றில் அந்த முகாம்களில் சித்திரவதைகளும் பதிவு செய்யப்படாத மரணங்களும் நிகழ்ந்துள்ளன என கூறியிருந்தேன். அதன் தொடர்பில் தடுப்பு முகாம்களின் நிலை பற்றித் தவறான தகவலை வெளியிட்டுள்ளேன் எனக் கூறி என் மீது வழக்குத் தொடரப்பட்டது.

''13 ஆண்டுகள் நீடித்த அந்த வழக்கு விசாரணை அண்மையில்தான் முடிந்தது. நான் குற்றச்சாட்டிலிருந்து விலக்கப்பட்டேன்.''

''தடுப்பு முகாம் நிலைமை பற்றி அத் தொழிலாளர்கள் என்னிடம் விளக்கியதைக் கேட்டு வெலவெலத்துப் போனேன். 20 பேருக்கு மேல் இறந்துபோனமை பற்றியும் அவர்கள் கூறினார்கள். போதுமான உணவில்லை. நல்ல தண்ணீரும் இல்லை என்று அவர்கள் புகார் செய்தார்கள். பெரி - பெரி நோயால் சிலர் உயிரிழந்துள்ளனர்.''

''அரசின் பாதுகாப்பில் இருப்போர் இறந்து போனால் அதற்கு அரசு தானே பொறுப்பேற்கவேண்டும். பெரி - பெரி நோயால் மக்கள் மடிவதற்கு விட்டுவிட்டால் அது திட்டமிட்ட கொலைபோல் அல்லவா இருக்கிறது. நோய் கண்டவருக்குத் தகுந்த சிகிச்சை கொடுக்காமலிருந்தால் எப்படி?''

''அந்த முகாம்கள் அமைதிக்காலத்தில் காணப்படும் போர்க்கைதிகளுக்கான முகாம் போல் இருப்பதாக நான் எழுதியிருந்தேன். 1996 இல் தவறான தகவல் வெளியிட்டதாகக் கூறி என்னைக் கைது செய்தார்கள். நான் எழுப்பிய விவகாரங்கள் பற்றி விசாரிக்கப்படவில்லை. எனக்குத் தகவல் கொடுத்தவர்களைப் பற்றி அறிந்து கொள்வதிலேயே பொலிஸார் அதிக ஆர்வமாக இருந்தார்கள்.''

''ஏதாவது விவகாரத்தை எழுப்பினால் அதைக் குற்றச் செயலாக்கும் வழிமுறையை அரசு கண்டுபிடித்திருக்கின்றது. அறிக்கையை நியூ ஸ்ரேய்ட்ஸ் டைம்ஸ் நிருபரிடம் வழங்கியமை நான் அதை வெளியீடு செய்ததற்கு ஒப்பாகும் என்று கூறப்பட்டது. அதனை வெளியிட்ட நிருபர் மீது நடவடிக்கை இல்லை. எழுதிய என் மீது மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

''13 ஆண்டுகளுக்குப் பின்னர் என் மீதான குற்றச்சாட்டு கைவிடப்பட்டது. வாழ்க்கையில் 13 ஆண்டுகள் பறிபோய்விட்டன. நீதி நிலைநாட்டப்பட்டதாகவும் கருதமாட்டேன். என் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட்டால், இந்நாட்டில் பேச்சுச் சுதந்திரத்துக்கு இடமளிக்கப்பட்டால், மனித உரிமைப் போராட்டவாதிகள் பாதுகாக்கப்பட்டால் அப்போதுதான் நீதி நிலைநாட்டப்பட்டதாகப் பொருள்படும். அப்போதுதான் என் விடுதலைக்கும் ஓர் அர்த்தம் இருக்கும்'' - என்றார்.

# மும்பையில் தாக்குதல் நடத்தியோர் வந்த கப்பல் அரபிக் கடலில் கண்டுபிடிப்பு

மும்பை, நவ. 29

மும்பையில் தாக்குதல் நடத்துவதற்காக தீவிரவாதிகள் வந்திறங்கிய கப்பல் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மும்பையிலிருந்து 112 கி.மீ. தொலைவில் அரபிக் கடலில் அந்த கப்பல் இருப்பதை கடலோரக் காவல் படை கண்டுபிடித்துள்ளது. அந்த கப்பலுக்குள் இருப்பவர்களைப் பிடிக்க கடற்படை நடவடிக்கை எடுத்துள்ளது.

தீவிரவாதிகள் நடுக்கடலிலிருந்து அதிநவீன பைபர் படகுகளில் வந்து நகருக்குள் புகுந்திருப்பார்கள் என்று நம்பப்படுகிறது. நடுக்கடலிலிருந்துதான் படகில் வந்துள்ளனர். எனவே, அவர்கள் கப்பலில்தான் வந்திருக்கவேண்டும் என்று கருதி கப்பலைத் தேட கடற்படையும் கடலோர காவல்படையும் முடுக்கிவிடப்பட்டது.

இதையடுத்து, எம்.பி. அல்பா என்ற கப்பலை கடலோர காவல் படை கண்டுபிடித்தது. கப்பலில் எத்தனை பேர் உள்ளனர். அது எங்கிருந்து வந்தது என்ற விவரங்கள் உடனடியாகத் தெரியவில்லை.

தீவிரவாதிகள் குஜராத்திலிருந்து கப்பல் வழியாக மும்பைக்குள் நுழைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். தீவிரவாதிகள் வந்த ஒரு படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் கடல் வழியாக வந்து தாக்குதல் நடத்துவது இதுவே முதல் முறையாகும். கடல் வழியாக சுமார் 20 முதல் 25 தீவிரவாதிகள் மும்பைக்குள் புகுந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

மும்பை 'கேட் வே ஒப்' இந்தியா பகுதியில் படகுகளில் 20 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் வந்திறங்கினர் என நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். இதையடுத்து, தேடுதல் பணி தொடங்கியது.



தென்னாபிரிக்காவின் ஜொகன்னஸ்பேர்க் நகரில் இந்த ஆண்டுக்கான மிஸ் ஜிப்ரால்டர் அழகிப் போட்டி அடுத்த மாதம் நடை பெற உள்ளது. இதில் 112 அழகிகள் கலந்து கொள்கின்றனர். லிம்போபோ மாநிலம் என்ட பெனியிலுள்ள ஹோட்டலில் அழகிகளுக்கான அணிவகுப்பு நடை பெற்றது. இதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் அழகிகள், சர்வதேச அளவில் நடைபெறும் மிஸ் வேர்ல்ட், மிஸ் எர்த், மிஸ் யூனிவர்ஸ் ஆகியவை உள்ளிட்ட போட்டிகளில் கலந்து கொள்வார்கள். போட்டியில் பங்கேற்கவிருக்கும் இந்த அழகி ஆந்தையுடன் கொஞ்சி விளையாடுகிறார்.

# ஆப்கானில் குண்டுவெடிப்பு நால்வர் பலி; 10 பேர் காயம்!

காபூல், நவ. 29

ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கருகே வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் 4 பேர் பலியாயினர். 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பலத்த பாதுகாப்புக்குட்பட்ட இப்பகுதியில் வியாழக்கிழமை காலை காரில் குண்டுகளை நிரப்பி வந்த தற்கொலைப் படைத் தீவிரவாதி குண்டுகளை வெடிக்கச் செய்தார்.

இதில் தீவிரவாதி உட்பட 4 பேர் இறந்தனர். 10 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸும், பல கார்களும் பலத்த சேதமடைந்தன. மரம் ஒன்று தீப்பற்றி எரிந்தது.

அப்பகுதியைக் கடந்த வெளிநாட்டு இராணுவ வாகனத்தைக் குறி வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என காபூல் நகர பொலிஸ் நிலையத் தலைவர் அலிஷா பக்தியவால் தெரிவித்தார்.

இந்தக் குண்டுவெடிப்புக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும், இது தலிபான்கள் அல்லது ஹக்கானி தீவிரவாதக் குழுவின் சைவரிசையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

## உலக அரங்கில்

# அமெ. பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு ஈ-ராக் நாடாளுமன்றம் ஒப்புதல்

ஈராக்கிலிருந்து 2011ஆம் ஆண்டளவில் அனைத்து அமெரிக்கப் படைகளும் வெளியேற வழிசெய்யும் அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு குறிப்பிடத்தக்க பெரும்பான்மையுடன் ஈராக்கிய நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் 198 உறுப்பினர்களில் 144 உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக வாக்களித்தனர் என ஈராக்கிய நாடாளுமன்ற சபாநாயகர் மஹ்மூட் மஷ்ஹதானி தெரிவித்துள்ளார்.

ஆளும் கூட்டணியில் இருக்கும் ஷியா மற்றும் குர்து இன உறுப்பினர்கள் இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இந்த உடன்படிக்கைக்கு சில சுனி அரசியல்வாதிகள் ஆதரவு தெரிவித்துள்ளனர். எனினும் இது தொடர்பில் அரசிடம் மேலும் பல சலுகைகளை அவர்கள் கோருகிறார்கள்.

# கொங்கோவின் தென் பகுதிக்குள் டுட்ஸி தீவிரவாதிகள் ஊடுருவல்!

கொங்கோவின் தென் நகரான கின்ஷஷாவை கொங்கோலிய டுட்ஸி தீவிரவாதிகள் கைப்பற்றிவிட்டனர். இந்நகர் உகண்டாவையொட்டிய கொங்கோ எல்லையில் அமைந்துள்ளது என ஐ.நா. அதிகாரியொருவர் தெரிவித்தார்.

டுட்ஸி தீவிரவாதிகளின் பிரவேசத்தையடுத்து, ஆயிரக்கணக்கான கொங்கோலிய சிவிலியன்கள் அண்டை நாடான உகண்டாவுக்குச் சென்றுக்கொண்டிருக்கிறார்கள். எங்கும் பதற்றம் நிலவுகிறது என்றும் அவர் கூறினார்.

இராணுவத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஜெனரல் லோரண்ட் நிகுண்டாவுக்கு விசுவாசமான டுட்ஸி தீவிரவாதப் போராளிகள் தாக்குதல்கள் நடத்தி, நகரைக் கைப்பற்றியுள்ளார்கள் என கொங்கோவிலுள்ள ஐ.நா. அமைதிப் படைப் பேச்சாளர் மெட் நொட்ஜி மவனுபாய் குறிப்பிட்டார்.

''சண்டை நீடிக்கின்றது. தீவிரவாதிகள் எங்கள் கிராமத்தைத் தாக்கினார்கள். எல்லா பெண்களையும் கொன்றார்கள்'' என 20 வயது அகதியான ஜேன் குறிப்பிட்டார் என ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

வெளியேறிக் கொண்டிருப்போர் உகண்டா அகதி முகாம்களை அடைவதற்கான வாகன வசதிகளை எதிர்பார்க்கிறார்கள். 13 ஆயிரம் அகதிகள் உகண்டாவிற்குச் சென்றுள்ளார்கள். கடந்த 48 மணித்தியாலயங்களில் 10 ஆயிரம் பேர்வரை சென்றுள்ளார்கள் என்றும் அவர்கள் விளக்கினார்கள்.

சண்டைகள், தீவிரவாதிகளின் தாக்குதல்கள் ஆகியவற்றிற்கு அஞ்சி இவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். கொங்கோவின் வட தீவு மாகாணத்திலுள்ள ருட் சுரு மாவட்ட கிராமங்களிலிருந்தே இவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

கிழக்கு கொங்கோவில் உக்கிரச் சண்டை மூண்டுள்ளது. பெருமளவிலான சர்வதேச அமைதிப் படைகளை அங்கு அனுப்ப வேண்டிய கட்[illegible] இது தொடர்பாக உ[illegible] கிறோம் என ஓரதிகாரி குறிப்பிட்டார்.

# இந்தியக் கடற்படையினரால் அழிக்கப்பட்டது தாய். படகு

## கடற்கொள்ளை எதிர்ப்புக் குழு தெரிவிப்பு

கோலாலம்பூர், நவ. 29

அரபிக் கடலில் கடந்த வாரம் இந்தியக் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்ட படகு சோமாலிய கடற்கொள்ளையரின் படகு அல்ல. அது தாய்லாந்துப் படகு. இது ஓர் அசம்பாவிதமாகும் என கோலாலம்பூரிலுள்ள சர்வதேச கடற் கொள்ளை எதிர்ப்புக் குழுவைச் சேர்ந்த நோயல் சூங் விளக்கமளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் பின்வருமாறு விவரித்துள்ளார்:-

அரபிக் கடலில் ஏடன் வளைகுடா அருகே கடற்கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. இப்பகுதியில் இந்திய கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக, இந்தியக் கடற்படை கப்பல் ஐ.என்.எஸ்., தபார் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளது. கடந்த 18 ஆம் திகதி சோமாலியக் கொள்ளையர்கள், தாய்லாந்து படகை கடத்திச் சென்றனர். அந்தப் படகில் கடற்கொள்ளையர்கள் பயங்கர ஆயுதங்களுடன் மேல் தளத்தில் திரிந்து கொண்டிருந்ததால், அதை கொள்ளையர்களின் படகு என நினைத்த இந்தியக் கடற்படை வீரர்கள், அப்படகைத் தாக்கி அழித்தனர்.

இதில் கப்பல் ஊழியர் ஒருவர் பலியானார். ஒருவர் மீட்கப்பட்டுள்ளார். 14 பேரை காணவில்லை. தாய்லாந்து படகு, மீன்பிடி சாதனங்களை ஏற்றிக்கொண்டு ஓமன் நாட்டிலிருந்து ஏடன் நாட்டுக்குச் சென்றபோது, கடற்கொள்ளையர்கள் அந்தப் படகைக் கடத்தியுள்ளனர். [illegible]இருந்த இந்திய கடற்படை அதிகாரிகளின் எச்சரிக்கையை மதிக்காத [illegible] தாய்லாந்து படகு அழிக்கப்பட்டுள்ளது. தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவே, இந்திய கடற்படை வீரர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் - இவ்வாறு சூங் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டித் தீர்த்த பெரு மழையால் ஒவ்வொரு வீட்டிலும் பாதிப்பு

இந்த வாரம் பெய்த பெருமழை காரணமாக யாழ்.குடாநாடெங்கும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்குப் பின்னர் நிகழ்ந்த பாரிய மழை வீழ்ச்சியைச் சமாளிக்க முடியாது குடாநாட்டு மக்கள் திணறினர். பல இடங்களில் வீடுகளில் உள்ள பயன்தரு மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. சில மரங்கள் வீடுகளின் மேல் விழுந்ததினால் உயிரிழப்பும், உடைமையிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

பல இடங்களில் வீதியோரமாக நின்ற அரசமரங்களும், ஆலமரங்களும் வீதிக்குக் குறுக்காக வீழ்ந்தமையால் அந்த வீதிகளூடான போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. வீழ்ந்துள்ள மரங்களை அப்புறப்படுத்தி, போக்குவரத்தினைச் சீர்செய்யும் முயற்சியில் படையினரும், பொது மக்களும் ஈடுபட்டதனையும் காண முடிந்தது.

குளங்கள், கிணறுகள் போன்ற நீர் நிலைகள் என்பன வெள்ள நீரால் மூடப்பட்டு காட்சியளிக்கின்றன.

வயல்களில் உள்ள நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. விவசாயப் பயிர் வகைகளும், வாழைமரங்களும் கடும்காற்று மழை காரணமாக அழிவடைந்துள்ளன.

தாழ்நிலப் பகுதிகளில் அமைந்திருந்த பல வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவுகளைப் பிரதேச செயலகங்களும் பொது அமைப்புகளும் வழங்கி வருகின்றன.

பாடசாலைகளில் மக்கள் தஞ்சமடைந்துள்ளதால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் ஆண்டிறுதிப் பரீட்சைக்காக வெள்ளத்தையும் தாண்டிச்சென்ற மாணவர்கள் பலர் ஏமாற்றத்துடன் வீடு செல்வதையும் அவதானிக்க முடிந்தது.

குடாநாட்டின் பிரதான குடிதண்ணீர் வழங்கும் நிலைகளான கிணறுகளில் வெள்ள நீர் உட்புகுந்ததாலும், குழாய்க் கிணறுகளில் உள்ள நீரைப் பெற்றுக் கொள்வதற்கு மின்சார வசதியின்மையாலும் குடிதண்ணீருக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

### வலி.கிழக்கில் பாதிப்புகள்

வலி.கிழக்குப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்த பெருமழையினாலும் சுழல்காற்றினாலும் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளநீர் வீடுகளுக்குள் புகுந்ததால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாடசாலைகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். குறிப்பாக ஆவரங்கால் தொடக்கம் வல்லைவெளி வரையான பகுதிகளிலுள்ள குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. கோப்பாய் பிரதேசத்தில் 30 முகாம்களில் இடம் பெயர்ந்தோர் தங்கியுள்ளனர்.

வீடுகளில் உள்ள பொருள் கள் பலவும் அழிவடைந்தும் வெள்ளநீர் அடித்துச் சென்றுமுள்ளன. மாணவர்க ளின் பாடப் புத்தகங்கள் பலவும் சேதம டைந்துள்ளன. வீட்டுக் கூரைகள் பலவும் தூக்கி வீசப்பட்டன. வீடுகளின் மேல் மரங்கள் வீழ்ந்து அழிவை ஏற்படுத்தி உள்ளன.

கோப்பாய் - மானிப்பாய் வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி ஆகியவற்றிற்கு குறுக்கே பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததால் மின் கேபிள்கள் அறுந்தும் கம்பங்கள் சாய்ந்துமுள்ளன. அத்துடன் தொலைபேசி வயர்களும் அறுந்தும் கம்பங்கள் சாய்ந்துமுள்ளன. பொதுமக்கள் மரங்களை உடனடியாக வெட்டி அப்புறப் படுத்தியதால் போக்குவரவுகள் ஓரளவு நடைபெற்றன்.

இதேவேளை, வலி.கிழக்கின் பெரும்பாலான பாடசாலைகளில் மக்கள் தஞ்சமடைந்திருப்பதால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.தஞ்சமடைந்த மக்களுக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவினர் முதற்கட்டமாக சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றனர்.

குழந்தைகள், முதியவர்கள் காலநிலை மாற்றத்தால் பெரும் அவதிப்படுவதையும் காணக்கூடியதாக இருந்தது. வலி கிழக்கின் சகல வாழைத்தோட்டங்களும் முற்றாக அழிவடைந்து வெட்ட வெளிகள் போல் காட்சியளிக்கின்றன.

ஏனைய உப உணவுப் பயிர்கள், மற்றும் பயிர்களும் வெள்ளத்தால் மூழ்குண்டு அழிவடைந்துள்ளன எனவும் விவசாயிகள் பெருங்கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் கிணறுகள் பலவற்றிற்குள் வெள்ளநீர் புகுந்துள்ளதால் குடிதண்ணீருக்கும் வேறு இடங்களை நோக்கிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதேவேளை ஊரெழுவின் வற்றாத நீரூற்றான பொக்கணை நீரூற்று பீறிட்டு பாய்கின்றது. இதனால் இப் பிரதேசத்தில் வெள்ளநீர் அதிகம் ஏற்பட்டுள்ளதாகவும் நீர் வடிவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் 5174 குடும்பத்தைச் சேர்ந்த 2165 பேர் பாதிப்புற்றதாக இதுவரை கிடைத்த புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இப்பிரதேசத்தில் 630 வீடுகள் முற்றாக பாதிப்படைந்தும் 3234 வீடுகள் பகுதியாக சேதமடைந்தும் உள்ளன என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இப்பிரதேசத்தில் 25 முகாம்களில் மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உடனடித் தேவையான சமைத்த உணவு கிராம அலுவலர் ஊடாக வழங்கப்பட்டு வருகிறது. இராணுவத்தினரும் உதவிபுரிந்து வருவ தாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இவர்களுக்கான மேலதிக உதவிகளை வழங்க 'கெயர்' அமைப்பு, 'டிஆர்சி' அமைப்பு, செஞ்சிலுவைச் சர்வதேசகுழு ஆகியனவும் பிரதேச செயலகமூடாக தொடர்பு கொண்டுள்ளன.

### வடமாரட்சியில் பாதிப்புக்கள்

கடந்த புதன்கிழமை குடாநாட்டில் பெய்த கடும் மழை, காற்றினால் வடமராட்சி கரையோர மக்களின் வீடுகள் சேதமடைந்தன.

திக்கம் சந்திக்கு அண்மையாக உள்ள பருத்தித்துறை- காங்கேசன்துறை பிரதான வீதி கடும் மழை மற்றும் கடல் அரிப்புக் காரணமாக சேதமடைந்துள்ளது.

தற்போது சிறு வாகனங்களின் போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. ஓரிரு நாள்களில் இவ்வீதி முற்றாக பாவிக்க முடியாத நிலை ஏற்படலாம் எனக் கருதப்படுகிறது.

அரச கட்டடங்கள், பொது மக்கள் வீடுகள், தொண்டர் நிறுவனங்கள் என அதிக அளவில் சேதமடைந்துள்ளன.

நேற்றும் உடுப்பிட்டி, வல்வை வெளி, பிரதான வீதியால் வீதியை மேவி மழை நீர் பாய்ந்த வண்ணம் காணப்பட்டது.

வல்லைவெளி முச்சந்தியிலுள்ள பாதுகாப்பு படையினரின் முகாம் முற்றாகச் சேதமானது.

வல்லை-அச்சுவேலிச் சந்திக்கு நேராக நாவல்காடு என்னும் இடத்தின் பிரதான வீதியில் தண்ணீர் வீதியை மேவி பாய்ந்த நிலையில் காணப்பட்டது. வீதியின் இருபுறமும் உள்ள நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் இடம்பெயர்ந்து ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் உறவினர்களின் வீடு களிலும் தங்கியுள்ளனர்.

### வலி.மேற்குப் பிரிவு வெள்ளத்தால் அவலம்

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சங்கானை, சித்தன்கேணி, சுழிபுரம், வடலியடைப்பு, வட்டுக்கோட்டை, அராலி, மூளாய், பொன்னாலைப் பகுதிஎங்கும் வெள்ளம் படுமோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

காரைநகர்-பொன்னாலை பிரதான போக்குவரத்துப் பாதை கடல் நீரால் சூழப்பட்டு, பாதையே தெரியாமல் உள்ளது. பஸ் போக்குவரத்து இல்லதாதால் காரைநகர் தொடர்புகள் மறு பகுதிகளுக்கு இல்லாமல் உள்ளது. மூளாய், பொன்னாலை தாழப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வீடுகளில் வெள்ளம் புகுந்ததால் விக்ரோறியா சுழிபுரக் கல்லூரியில் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

தோப்பு முகாம், ஓடக்கரை முகாம்I,II, சலேசியார் முகாம், நீதிவான் முகாம், கப்பண்டர் முகாம்களில் வாழ்ந்த 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அரசி னர் அ.மி.த.க.பாடசாலை, சலேசியார் தேவாலயம் மற்றும் பொது மண்ட பங்கங்களுக்குத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களின் வீட்டுத் தகரக் கூரைகள் யாவும் காற்றுடன் போய்விட்டன.

சங்கரத்தை-சங்கானை வீதிப் போக்குவரத்து பாதை வெள்ளத்தால் தடைப்பட்டது.

சங்கானை மண்டிகைக்குளம் நிரம்பி, றோட்டின் மேல் பாய்ந்து வரும் வெள்ளம் ஊருக்குள் புகுந்தது. பாரிய மரங்கள், பயன்தரு மரங்கள் யாவும் முறிந்து வீழ்ந்துள்ளன.

சங்கானை-சங்கரத்தைப் பாதையில் குடியேற்றத் திட்டத்திற்கருகில் உள்ள மின் கம்பங்களின் மேல் மரங்கள் முறிந்து வீழ்ந்து மின்சார வயர்கள் எல்லாம் தொங்கியபடி உள்ளன.

### இணுவில் கிழக்கில் இடப்பெயர்வு

ஜே/190 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட இணுவில் வடகிழக்குப் பகுதியில் வெள்ளம் புகுந்ததனால் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இவர்கள் அப் பகுதியில் உள்ள கலாஜோதி சன சமூக நிலையத்திலும் மற்றும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான முதல்கட்ட உதவிகளை மேற்படி சனசமூக நிலையதின் இளைஞர்கள் வழங்கினர். தொடர்ந்து வலி.தெற்கு பிரதேச செயலகத்தினால் அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற பொருள்கள் வழங்கப்பட்டன. இவற்றுடன் இளைஞர்களால் சேகரிக்கப்பட்ட மரக்கறி, விறகு என்பவற்றை கொண்டு உணவு தயாரிக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

இப்பகுதி பாதிக்கப்பட்ட 52 குடும்பங்கள் பற்றிய விவரம் நிலைய இளைஞர்களால் சேகரிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைபகுதியிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இணுவில் புகையிரத நிலைய முகாமில் தங்கிருந்த பலரது வீடுகள் கூரைகளை இழந்து வெறும் எலும்புப் கூடுகளாகக் காட்சியளிக்கின்றன.

### நெடுந்தீவில்

வெள்ளம் கடும் காற்று என்பவற்றால் நெடுந்தீவு கடற்கரையோரப் பகுதிகள் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடல் கொந்தளிப்பு காரணமாக கடல் அலைகள் கரையோரப் பகுதி குடியிருப்புகளில் புகுந்து சேதங்களை உண்டு பண்ணியது. அனேகர் தமது வீடுகளை விட்டு ஆலயங்களில் தஞ்சமடைந்தனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ சிகிச்சைகளை பொதுமக்கள் தங்கியுள்ள ஆலங்களுக்குச் சென்று நெடுந்தீவு வைத்திய அதிகாரி செல்வி பா.தாமரைச் செல்வியும் குழுவினரும் வழங்கியதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பல்கலைக்கழகமும் எஞ்சவில்லை

யாழ்.பல்கலைக்கழகத்தினுள்ளும் விஞ்ஞான பீடத்தில் குறிப்பாக கணனி ஆய்வுகூடத்தினுள்ளும் வெள்ளம் புகுந்து பெருமளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

### வலி.மேற்கில்

சுழிபுரம் வழக்கம்பரையில் பழமை வாய்ந்த மூன்று ஆலமரங்கள் முறிந்து வீழ்ந்தன. சுழிபுரம் மத்தியில் ஒரு மரமும் மற்றும் வீரபத்திர கோயிலுக்கு அண்மையில் இன்னொரு ஆலமரமும் வீழ்ந்துள்ளன. இதுதவிர பெறுமதி வாய்ந்த மா, வேம்பு, பலா, பனை, தேக்கு போன்ற நூற்றுக்கணக்கான மரங்களும் முறிந்துள்ளன.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இடம்பெயர்ந்த பாண்டவட்டை, பெரிய புலோ, காளுவன் கிராம மக்கள் மழை வெள்ளம் காரணமாக தங்கியுள்ளனர். இவர்களுக்கு பிரதேச செயலகத்தினர் உணவு மற்றும் இதர வசதிகளைச் செய்து கொடுத்துள்ளன.

### கால்நடைகளும் தப்பவில்லை

நீர்வேலி பிரதேசத்தில் பட்டி மாடுகள் 100க்கு மேற்பட்டவை இறந்துள்ளன.

தொடர் மழையினாலும் காற்றினாலும் ஏற்பட்ட காலநிலையினால் விறைப்படைந்து பரிதாபகரமாக அவை அழிந்துள்ளன என உரிமையாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

இதேவேளை மேலும் பல ஆடுகள் மற்றும் கோழிகளும் இறந்தழிந்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### போக்குவரத்து பாதிப்பு

பண்ணைப்பாலம் சேதமடைந்ததால் யாழ்ப்பாணத்துக்கும் தீவுப் பகுதிக்கும் இடையிலான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலம் மழையினால் சேதமுற்றதாக தீவுப் பகுதியில் இருந்து நகருக்கு வரும் பயணிகள் பயணத்தை மேற்கொள்ள முடியாமலிருந்தது.

### மாநகரசபையின் சேவை

மழை நீர் வீடுகளில் உட்புகுந்ததால் தமது வீடுகளில் தங்க முடியாமல் அவதிப்பட்ட மக்களை அகதி முகாமுக்கு அழைத்துச் செல்லும் பணியில் யாழ்.மாநகரசபை உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

எனினும் நீரை வெளியேற்றும் பணியில் மாநகராட்சி மன்ற ஊழியர்களை ஈடுபடுத்தக் கூடியதற்கான வாகன வசதிகள் இல்லாதிருந்தது. ஒரேயொரு ஓட்டோ வண்டியைப் பயன்படுத்தியே அனைத்துப் பகுதிகளுக்கும் செல்ல வேண்டிய நிலையில் மாநகரசபை ஊழியர்கள் உள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

குளங்களை அண்டிய பிரதேசங்களில் நிறைந்து வீதிகளுக்கு மேலாகப் பாய்ந்து கொண்டிருக்கும் மழை நீரை வெளியேற்றுவதற்காக மாநகரசபை முடிந்தவரை செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. முன்னதாகவே பல வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டு அதன் மூலம் நீரை வெளியேற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்றன என யாழ்.மாநகராட்சி மன்ற ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

முக்கியமான வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதுடன் நீர் உட்புகுந்ததால் பல குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளன.

இம்முறை வெள்ளம் மிகக் கூடுதலான அளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலைளில் மின்சாரம், தொலைத் தொடர்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனினும் ஒரு தொலைபேசி மூலம் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்படுவதாகவும் அது எப்படி இருப்பினும் மக்களின் கஷ்டங்களைப் போக்கும் வகையில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் ஆணையாளர் சரவணபவ தெரிவித்தார்.

### அரசசார்பற்ற நிறுவனங்களின் மனிதாபிமான சேவைகள்

அடைமழை, வெள்ளப் பெருக்குகளைத் தொடர்ந்து யாழ்.மாநகரசபைக்கு உதவிகளை வழங்கி நிலைமையைச் சீர் செய்வதற்காக யூ.என்.ஓ.பி.எஸ்.அமைப்பு உபகாரணங்களையும் தொழிலாளர்களையும் வழங்கவும் உடனடித் தேவைகள் குறித்து உதவவும் முன்வந்துள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு யுனிசெப் ஆகியவையும் உதவ முன்வந்துள்ளன எனவும் ஆணையாளர் மு.செ.சரவணபவ் தெரிவித்தார்.

### மீன்பிடி உபகரணங்கள் சேதம்

அண்மையில் வீசிய நிஷா புயல் காரணமாக குடாக்கடலில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள குருநகர் மீனவர்களுடைய தொழில் உபகரணங்களுக்கு பாரியளவு சேதங்கள் ஏற்பட்டுள்ளன என குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ம.பிறேமன் தெரிவித்தார்.

குடாக்கடலில் குருநகர் இறங்குதுறையில் பாதுகாப்பாக கட்டப்பட்டிருந்த இயந்திரப் படகுகளில் 64 படகுகள் தொழில் செய்யமுடியாத அளவு சேதமடைந்துள்ளன.

இதன் சேதப் பெறுமதி சுமார் 10 லட்சம்.

யாழ்.குடாக்கடலில் நாளாந்தம் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களின் கலங்கள் மற்றும் வலைகளும் கடலலைகளில் தாக்கம் காரணமாக சேதமடைந்துள்ளன.

(202-28-29-51-72-11-111-250-119-70-236-218-224-100-249-120)

## மழையின் பாதிப்பு! குடி தண்ணீருக்கும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், நவ.29

குடாநாட்டில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு பெய்த கடும் காற்றுடன் கூடிய மழையால் குடி தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குடிதண்ணீர் கிணறுகளுக்குள் வெள்ள நீர் புகுந்தமையே இதற்குக் காரணமாகும்.

வீடுகளிலும் பொது இடங்களிலும் உள்ள கிணறுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளமையால் குடிதண்ணீரைப் பெற முடியாது மக்கள் அந்தரித்து வருகின்றனர்.

குழாய்க்கிணறு மூலமும் குடிதண்ணீரைப் பெற முடியாதுள்ளது. மின்சார வசதி இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

மக்கள் குடி தண்ணீருக்காக அலைந்து திரிவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

நீரைக் கொதிக்க வைத்து பருகுவதன் மூலம் தொற்றுநோய் பரவுவதைத் தடுக்குமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (202-119)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.கிழக்குப் பிரதேச சபை, புத்தூர்
## கேள்வி அறிவித்தல் - காலநீடிப்பு

இப்பத்திரிக்கையில் 15.11.2008ஆம் திகதி பிரசுரமாகிய அலுமினியம் கண்ணாடி பிரிவிடல் வேலைக்கான கேள்வி அறிவித்தல் பின்வருமாறு காலநீடிப்பு வழங்கப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 01.12.2008 மு.ப. 10 வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 01.12.2008 பி.ப. 1.30 வரை
கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கும் திகதி: 01.12.2008 பி.ப. 2.30

வலி.கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், புத்தூர். (சி/555771)

தம்பையா நடராசா
செயலாளர்.

## வீட்டுக்கிருத்திய நிகழ்வு ஒத்திவைப்பு

இன்று (29.11.2008) சனிக்கிழமை நடைபெறவிருந்த
**அமரர் கதிரவேலு இராசேந்திரம்**
அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு
தவிர்க்கமுடியாத காரணத்தால்
ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை
மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

மல்லாகம் மேற்கு,
நரிசுட்டான். (80121)

தகவல்:
குடும்பத்தினர்.


## COMPUTER EXPRESS
Institute of Information Technology
167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250, 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing
❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

**Diploma in Video Editing**
முன்னணி Video Mixing Software களுடன்
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio
❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

**Diploma in Graphic Designing**
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio
❖ Micro Media Flash
Course Fee : 2000/=

**Diploma in Computerized Accounting**
Course Fee : 3500/=

வகுப்புக்கள் ஆரம்பம் :01/12/2008 09.00AM



## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
உதயன் பாம்,
நாயன்மார்கட்டு,
(ஆயுள்வேத வைத்தியசாலைக்கு அருகில்). (80148)


## பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம் இணுவில்
**BARATHY**
சித்தன்கேணி.

இன்றும், நாளையும் வகுப்புகள் நடைபெறமாட்டாது. மீண்டும் வகுப்புகள் 06.12.2008 வழமைபோல் நடைபெறும்.
குறிப்பு:- Day Class வழமைபோல் நடைபெறும். (C/555769)

## பரீட்சைகள் நடைபெறும்

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் இன்று சனிக்கிழமை தொடக்கம் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (202)

## நியமனக் கடிதங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்,நவ.29

யாழ்.மாவட்டத்திலிருந்து ஆசிரியர் நியமனம் பெறும் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (202)

## தேங்காய், சீவல் விலை உயர்வு

குருநகர்,நவ.29

சின்னக்கடைப் பொதுச் சந்தையில் தேங்காய், சீவல் பாக்கு ஆகியவைகளின் விலை நேற்றைய தினம் திடீரென உயர்வடைந்தது.

இதுவரை காலமும் ரூபா 20 மற்றும் ரூபா 30 ஆக விற்பனை செய்யப்பட்டு வந்த தேங்காய் ஒன்று 60 ரூபா வரை விற்கப்பட்டது.

இதேநேரத்தில் சீவல் பாக்கு கிலோ ரூபா 400 ஆக விலை உயர்ந்து காணப்பட்டது. (202-51)

## பிற்போடப்பட்டன

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் எதிர்வரும் 6ஆம் திகதி நடத்தவிருந்த சர்வதேச ஊனமுற்றோர் தினமும் அதனை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியிலான பாடசாலை மாணவர்களுக்கிடையே நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தவிருந்த கட்டுரைப் போட்டிகளும் இயற்கை அனர்த்தத்தை முன்னிட்டு பிற்போடப்பட்டுள்ளது. (202)

* * *

வண்ணை,நவ.29

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி நடத்தும் ஒளிக்கலை விழாவின் சகல போட்டிகளுக்குமான முடிவு திகதியை எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை வரை பிற்போடப்பட்டுள்ளதாக முன்னணிப் பொருளாளர் கலையார்வன் கு.இராயப்பு தெரிவித்தார். (202-160)

* * *

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் சங்கானைக் கோட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 54 மாணவர்களுக்கு நாளை நடத்தவிருந்த பரிசளிப்பு நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் உரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் சம்மேளனச் செயலாளர் எஸ்.குமாரசிங்கம் தெரிவித்தார். (203)

# மரண அறிவித்தல்



## முருகேசு பூபால் (சின்ன பேபி)

கொக்குவில் கிழக்கு, வளாக வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முருகேசு பூபால் (சின்ன பேபி) 27.11.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் முருகேசு - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் இராசகுமாரியின் அன்புக் கணவரும் செல்லையா, ஞானேஸ்வரி (கனடா), மகேஸ்வரி (சின்னமணி), தர்மலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்சினி, தர்மினி, கயேந்திரன் (கனடா), உசேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரமேஸ்கரன், சுதாகரன், காமினி ஆகியோரின் மாமனும் லத்திக்கா, பிரியங்கா, துவாரகா, அஷான், கஜானா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2008) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வளாக வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (சி/555772)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பிள்ளைகள்.


இதோ!
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

**சித்தாரா**
**அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No: 6382) AR/PR/NO: 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/555276)


## ஈராண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 | 29 |
| 06 | 11 |
| 1925 | 2006 |

### அமரர் வைரமுத்து செல்லையா

திதி: துதியை

எம் உயிரினில் கலந்து
உணர்வினில் ஒன்றிவிட்ட
அன்பு அப்பாவே!
தங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (சி/555772)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



| அன்னையின் மடியில் | நந்தன் காலடியில் |
|---|---|
| 30 | 29 |
| 09 | 11 |
| 1930 | 2003 |

### அமரர் சின்னத்தம்பி திருநாவுக்கரசு

(பொலிகண்டி கந்தவனம் கோயில் 6ஆம் திருவிழா உபயகாரர்)

60 மாதங்கள் சென்றது ஐயா!
உங்கள் பாசமுகம் எங்கள்
நெஞ்சைவிட்டு மறையாது ஐயா!

உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்:
மனைவி: தி.அன்னமுத்து
மகன்: லோகநாதன் (கனடா)
மருமகள்: தங்கராணி (கனடா)
பேரப்பிள்ளைகள்: பிரசாந் (கனடா), அனுசாந் (கனடா), அனுசாந்தி (கனடா).

சந்நிதி வீதி,
அச்சுவேலி. (80175)

## மூன்றாண்டு நினைவலைகள்

மண்ணுலகு
11.09.1931

விண்ணுலகு
02.12.2005



### அமரர் ஐயாத்துரை பூபாலசிங்கம்

திதி: துதியை (29.11.2008)

அன்பான எமதருமை அப்பாவே!
பாசமுடன் எம்முடன் உறவாடி
எம்மை வாழவைத்த இதய தீபம்
எம்மைவிட்டு சென்று மூன்றாண்டுகள்
ஆன்ன மூவாயிரம் ஆண்டுகள்
சென்றாலும் எம் இதயக் கோயில்
தீபம் தான் அப்பா!

11, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (80165)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சேமிப்பு வங்கியின் அஞ்சல் கிளை யாழ்.நகரில்

யாழ்ப்பாணம்,நவ.29

தேசிய சேமிப்பு வங்கியின் அஞ்சல் வங்கிக் கிளை யாழ்.நகரில் இல.112, நாவலர் வீதியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அலுவலக தேசிய சேமிப்பு வங்கிச் சேவையின் பிராந்திய தலைமையகமாக இக்கிளை செயற்படவுள்ளது.

கிளையின் திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வடக்கு கிழக்கு வலய முகாமையாளர் சி. சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வீ.குமரகுருவும், கௌரவ விருந்தினர்களாகப் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா, ஆரோக்கிய அன்னை ஆலயப் பங்குத்தந்தை ஜேக்கப் நிக்கலஸ், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழகப் பேராசிரியர்களான எம்.நடராஜசுந்தரம், கே.குகபாலன், கே.தேவராஜா ஆகியோர் கலந்துகொள்வர். (202)

## பணிநயப்பு விழா பிற்போடப்பட்டது

கோப்பாய்,நவ.29

கோப்பாய் கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தினரால் நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தத் தீர்மானிக்கப்பட்ட பணிநயப்பு விழா தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். (202-72)



சிறி நதியா டிஜிற்றல் கலர் லாப்பின் திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட படம்.

'ஹெய்லிஸ் கொன்ஸ்யூமர்' நிறுவனத்தின் வர்த்தகப் பிரிவுத் தலைவர் செ.நிமால் நாடாவெட்டிக் கட்டடத்தைத் திறந்துவைக்கின்றார்.

அருகில் 'ஹெய்லிஸ் கொன்ஸ்யூமர்' நிறுவனத்தின் தொழில்நுட்ப நிறைவேற்றுநர் எஸ்.யூ.வீரக்கொடி, விற்பனை நிறைவேற்றுநர் ருக்சான்குமார ஆகியோர் அருகில் நிற்கின்றனர்.

## வந்தாறுமூலையில் கிளைமோர் மீட்பு!

கொழும்பு,நவ.29

மட்டக்களப்பு, வந்தாறுமூலையில் உள்ள களுவங்கேணிப் பகுதியில் 7 கிலோ கிராமுடைய அதிசக்தி வாய்ந்த கிளைமோர்க் குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் மாலை பொலிஸாரால் மீட்கப்பட்டது என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதியில் உள்ள வீதியோரம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்தக் குண்டைப் பொலிஸார் கண்டு பிடித்து உடனடியாகச் செயலிழக்கச் செய்தனர் எனவும் அவர் கூறினார்.

சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியில் பொலிஸார் மேலதிக சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர்களின் மனங்களை வெல்ல அரசு விரும்பினால் தமிழ் ஊடகங்களின் குறைபாடுகளைத் தீர்க்கவேண்டும்

## சபையில் சந்திரசேகரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு,நவ.29

தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க இந்த அரசு விரும்புமானால் முதலில் தமிழ் ஊடகங்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்திசெய்யவேண்டும்.

- இவ்வாறு ஜே.வி.பியின் எம்.பியும், குழுக்களின் பிரதித் தலைவருமான ராமலிங்கம் சந்திரசேகரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் ஊடக அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் தமிழ் ஊடகங்கள் பெரும் குறைபாடுகளுடன் இயங்குகின்றன. தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க அரசு விரும்பினால் முதலில் தமிழ் ஊடகங்களின் குறைபாடுகளை நீக்கவேண்டும்.

அந்த ஊடகங்களுக்கு நல்லதொரு தலைமைத்துவத்தை அரசு வழங்கவேண்டும். ஊடகவியலாளர்களும் மிகவும் கஷ்டத்தில் உள்ளனர். அவர்கள் பணக்காரர்கள் அல்லர். அவர்களுக்கு சில வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

ஊடகவியலாளர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள், கணனிகள் போன்றவை வழங்கப்படும் என்று மஹிந்த சிந்தனையில் கூறப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களுக்குத் தவணைக் கொடுப்பனவு அடிப்படையிலாவது 'லப்ரொப்' கணனிகளை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோல் நாடாளுமன்றச் செய்திகளை உலகிற்குக் கொண்டு செல்பவர்கள் நாடாளுமன்ற ஊடகவியலாளர்கள்தான். அவர்களைக் கௌரவிக்க அவர்களுக்கு நாடாளுமன்றத்தால் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படல்வேண்டும் - என்றார். (சி)

# மக்கள் முகம்



வட்டு.வடக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கலைவாரிதி, சித்தாந்தச் செல்வர், வல்லிபுரம் யோகானந்தசிவம் 2008ஆம் ஆண்டு வடமாகாணம் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மாகாண மட்டத்தில் நடத்திய ''தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்கானது'' என்ற கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

ஓய்வுபெற்ற அதிபரும், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உபதலைவருமான இவர் சிறந்த விளையாட்டு வீரர், நாடக நடிகர், நாட்டுக்கூத்து கலைஞர், எழுத்தாளர், பேச்சாளர், சமூக சேவையாளர், ஆசிரிய ஆலோசகர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பல கவிதைப் போட்டிகளில் பங்குபற்றிப் பல பரிசில்களையும் பெற்றுள்ளார்.



பருத்தித்துறை காணிப்பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளருமான திருமதி சரஸ்வதி தியாகராஜன் 37 வருட அரச சேவையிலிருந்து 18.10.2008 தொடக்கம் ஓய்வுபெற்றுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரியான இவர், 1971ஆம் ஆண்டு எழுதுவினைஞராக அரசாங்க சேவையில் பிரவேசித்து, கொழும்பு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் பதவியைப் பொறுப்பேற்றார். பருத்தித்துறை மதுவரித் திணைக்களம் மாவட்டக் காணிப் பதிவகங்களில் பணியாற்றி 01.07.1987இல் எழுதுவினைஞர் சேவை அதிவிசேட தரம் பரீட்சையில் சித்தியடைந்து மேலதிக காணிப் பதிவாளராக நியமனம் பெற்றார். கொழும்பு பதிவாளர் நாயகம் திணைக்களத்திலும் பணியாற்றி பின்னர் பருத்தித்துறை காணிப்பதிவாளராகவும், மேலதிக மாவட்டப் பதிவாளராகவும் பொறுப்பேற்று 18.10.2008 வரை சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பணியாற்றியபோது சிறந்த சேவைக்கான விருதையும் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கௌரவிக்கப்பட்டவர்.



வடக்கு கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு ''சிறுவர்களுக்கான தேசிய மரபுரிமை'' என்னும் கருப்பொருளில் நடத்திய ஆக்கத்திறன் இலக்கியப் போட்டியில் கவிதை, சிறுகதை ஆகிய துறைகளில் பெ.ஸ்ரீகந்தநேசன் இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளார்.

2003இல் இலக்கியத் துறையில் பிரவேசித்த இவர் இளைஞர் விருது, விபவி விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார். இலங்கை, இந்திய சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் தொடர்ந்து எழுதி வருகின்றார். இரண்டு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். பாடல் இயற்றுதல், கவிதை, சிறுகதை, கட்டுரை போன்ற துறைகளில் ஆளுமை கொண்டவர்.



ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய உப அதிபராகப் பணியாற்றிய இராசரத்தினம் செல்வகுமார் 31 வருடங்கள் கல்விப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளார்.

பலாங்கொட தமிழ் மகாவித்தியாலயம், களுத்துறை சென். ஜோன்ஸ் கல்லூரி, கனகபுரம் அ.த.க. பாடசாலை, மயிலணி சைவ மகா வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியப் பணியாற்றியிருந்த இவர் கலைமாணிப் பட்டம் பெற்றதோடு விஞ்ஞான பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் விளங்கினார். (38)

காரைநகர் அபிவிருத்திச் சபையின் புதிய செயலாளராக காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் காரைநகர் மணிவாசகர் சபையின் தலைவருமான பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயலாளராக நீண்டகாலம் கடமையாற்றி காரைநகரில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்த ஜெ.தில்லையம்பலவாணர் அண்மையில் காலமானதை அடுத்து அபிவிருத்திச் சபையின் செயலாளராக டாக்டர் சு.நடராசா நியமிக்கப்பட்டிருந்தார். அவர் தற்போது வெளியூர் சென்றிருப்பதால் அவரின் இடத்திற்கே புதிய செயலாளராகப் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். (202-250)

# 'எட்னா' சொக்லேட் தடை நீக்கம் இலங்கையருக்குக் கிடைத்த வெற்றி

## ஊடக சந்திப்பில் நிறுவனத்தின் தலைவர் கருத்து

கொழும்பு,நவ.29

''உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் எமது 'எட்னா' சொக்லேட் நிறுவனம் மீண்டும் பழைய கௌரவத்தைப் பெற்றிருக்கிறது. இது எங்களுக்கும் இலங்கையருக்கும் கிடைத்த வெற்றியாகும்.''

- இவ்வாறு 'எட்னா' சொக்லேட் நிறுவனத்தின் தலைவர் லால் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

'எட்னா' சொக்லேட் நிறுவனம் கடந்த புதன்கிழமை, கொழும்பு ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டலில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய லால் எதிரிசிங்க இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

எமது சொக்லேட் வகைகளில் 'மெலமைன்' இரசாயனப் பதார்த்தம் இருக்கின்றது என்று கூறி அதனைத் தடை செய்தமை, எமது பெயருக்கு ஏற்படுத்தப்பட்ட சதித்திட்டம் ஆகும்.

எமது பொருள்கள் தடை செய்யப்பட்டதன் பிற்பாடு, 40 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருக்கிறது.

'எட்னா' சொக்லேட் தடை செய்யப்பட்டதிலிருந்து எம்மிடமிருந்து எடுக்கப்பட்ட பொருள்கள், நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் எமக்கு மீளக்கிடைத்திருக்கின்றன.

சொக்லேட் வகைகள் தயாரிப்பதற்குரிய பால்மா வகைகள் இலங்கையில் இல்லாததன் காரணத்தினால்தான், வெளிநாடுகளில் இருந்து அவற்றை இறக்குமதி செய்யவேண்டிய தேவை எமக்கு ஏற்படுகிறது. குறிப்பாக ஆஸ்திரேலியா, சீனா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால் மா வகைகளிலிருந்தே 'எட்னா' சொக்லேட் தயாரிக்கப்படுகிறது.

இந்தப் பிரச்சினையின் பின்னர் அந்த நாடுகளின் பால் மா உற்பத்தியாளர்களிடம் நாங்கள் தொடர்பு கொண்டு கேட்டபோது, அந்தப் பால் மா வகைகளில் 'மெலமைன்' பதார்த்தம் இல்லையென அவர்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

'எட்னா' சொக்லேட் வகைகளில் 'மெலமைன்' பதார்த்தம் இருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்ட பின்பு, சுகாதார அமைச்சு உட்பட 46 பரிசோதனைகள் நடத்தப்பட்டன. அந்தப் பரிசோதனைகளின் மூலம் 'எட்னா' சொக்லேட்களில் 'மெலமைன்' பதார்த்தம் இல்லையெனக் கண்டறியப் பட்டுள்ளது.

இறுதியாக உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் எமது 'எட்னா' சொக்லேட் நிறுவனம் மீண்டும் பழைய கௌரவத்தைப் பெற்றிருக்கின்றது.

இது எங்களுக்கும் இலங்கையருக்கும் கிடைத்த வெற்றியாகும் - என்றார். (சி)

# சங்கங்கள், சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள்

வடமாகாண புற்றுநோய் - எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கத்திற்குப் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரனும், உபதலைவர்களாக வீ.ரி.சிவலிங்கம், த.கனகசபை ஆகியோரும், செயலாளராக ச.குகராஜனும், பொருளாளராக கே.எம்.பத்மநாதனும் தெரிவாகியுள்ளனர்.

* * *

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளைக்கான புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:

போசகர்கள் - எஸ் சூசைதாசன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் - மன்னார்), எஸ்.ஜெயரத்தினம் (புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர்), தலைவர் - பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் (யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்), சிரேஷ்ட துணைத்தலைவர் - பி.லோகநாதன், செயலாளர் - கே.சுதாகரன், பொருளாளர்- பி.மதிகரன் ஆகியோரோடு 11 நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (203-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொ / இந்து மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை.

# Special Guidance for O/L 2008 Students

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்

General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008

T / 22 / I — தமிழ் மொழியும் இலக்கியமும்-I — One hour

பகுதி - 1

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் மிகப் பொருத்தமானதுமான விடையைத் தெரிவு செய்க.

01. வசந்தக் காலம் வந்தால் கோகிலத்துக்கு கொண்டாட்டம். இங்கு கோகிலம் என்பது,
1) புறா. 2) மயில். 3) குயில். 4) காகம்.

02. வைரமுத்தார் அம்மனுக்கு குளூர்த்தி செய்துவிட்டு வீட்டுக்குச் சென்றார். இங்கு குளூர்த்தி என்பது,
1) நேர்த்திக்கடன். 2) கற்பூரம். 3) அபிடேகம். 4) பூசை.

03. ''மொய்யிலை மாறன் களிறு'' மொய் என்பதன் எதிர்ப்பதம்,
1) வலிமை. 2) மென்மை. 3) கடினம். 4) உண்மை.

04. பெண் புலி போல் பாய்ந்து மருமத்தில் குத்திக்கொன்று விட்டாள். இங்கு மருமம் என்பதன் ஒத்தக்கருத்து,
1) வயிறு. 2) இடை. 3) மார்பு. 4) கழுத்து.

05. கண்ட பேரண்டத் தண்டலை நாடும். இங்கு தண்டலை என்பதன் எதிர்ப்பதம்,
1) சோலை. 2) காடு. 3) மாருதம். 4) நாடு.

06. கிரிக்கற் விளையாட்டில் எமது வீரர் பெயர் பொறித்துள்ளார். பெயர் பொறித்தல் என்னும் மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்,
1) பதிவு செய்து வைத்தல். 2) வெற்றி பெறுதல்.
3) புகழை நிலை நாட்டுதல். 4) சவாலை ஏற்றுக்கொள்ளல்.

07. கையைக் கடித்தல் என்னும் மரபுத்தொடருக்கு ஒத்தக் கருத்துள்ள மரபுத்தொடர்,
1) கையறுதல். 2) துண்டு விழுதல்.
3) கை துடைத்தல். 4) மோசம் போதல்.

08. அடுத்த ஆண்டிற்கான பட்ஜெட் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியால் வாசிக்கப்பட்டது. இங்கு வந்துள்ள பட்ஜெட் என்பதன் தமிழ் வடிவம்,
1) எண்மாவம். 2) பாதீடு. 3) சன்மானம். 4) வரவு செலவு.

09. முண்டகம், முளரி, கமலம் என்பன குறிப்பது,
1) தாமரை. 2) மல்லிகை. 3) அல்லி. 4) வானம்.

10. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றின் தொகைப் பெயர்,
1) ஐம்பூதம். 2) ஐம்பொறி. 3) ஐம்புலன். 4) ஐந்திணை

11. நிமலன் நடந்து சென்றப் பாதை கரடு முரடாக இருந்ததால் அவன் கால்கள் புண்ணாகிப் போனது கரடுமுரடு என்பது,
1) அடுக்குத்தொடர். 2) இணைமொழி.
3) இரட்டைக்கிளவி. 4) அடுக்கிடுக்குத் தொடர்.

12. நளினி கலகலவென சிரித்தாள். இங்கு வந்துள்ள கலகல என்பது,
1) இணைமொழி. 2) அடுக்குத்தொடர்.
3) இரட்டைக் கிளவி. 4) அடுக்கிடுக்குத் தொடர்.

13. தீயவன் ஒருவனுக்கு நன்மை செய்தது போல என்ற கருத்தைத் தரும் உவமைத் தொடர்,
1) பாம்புக்கு பால் வார்த்ததைப் போல. 2) கனியிருக்கக் காய் கவர்வது போல.
3) அழல் அருகே சேர்ந்த மலர் போல. 4) நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தாற் போல.

14. புறவுலகுக்குத் தெரியாமல் அறிஞர் ஒருவர் இருப்பதை புலப்படுத்த பொருத்தமான உவமைத்தொடர்,
1) உள்ளங்கனி நெல்லிக்கனிப் போல. 2) நீர்மேல் எழுத்துப்போல.
3) சூரியனைக் கண்ட பனிபோல. 4) குடத்துள் விளக்குப் போல.

15. இலை குழைகளினால் வேயப்பட்ட குடிசை,
1) அன்னசாலை. 2) குடிசை. 3) பன்னசாலை. 4) ஆச்சிரமம்.

16. பிற்காலத் தேவைக்காக சேமித்து வைக்கப்படும் பொருள்,
1) மானியம். 2) ஏய்ப்பில் வைப்பு. 3) காப்புறுதி. 4) திறை சேரி.

17. கோழிக்கு குஞ்சுப் போல குரங்குக்கு,
1) பறள். 2) வடலி. 3) குருளை. 4) குஞ்சு.

18. எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும் எனும் கருத்தை தரும் பழமொழி,
1) சமன் செய்து சீர்தூக்கி. 2) ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.
3) ஆழமறியாது காலை விடதே. 4) கிட்டாதாயின் வெட்டென மற.

19. கணவன் - மனைவி என்பது போல எயினன்,
1) எயினி. 2) எயிற்றி. 3) எயினை. 4) எயினத்தி.

20. அறுபதாம் ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா வைரவிழா என்பது போல எழுபத்தைந்து ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா,
1) பவள விழா. 2) பொன் விழா. 3) அமுத விழா. 4) வெள்ளி விழா.

★ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

21. அரசரும் செல்வரும் தமக்குள் கீழ்ச்சேவை புரிவோருக்கு வழங்கும் நிலம் ........................ எனப்படும்.
1) கடகம். 2) இராச காரியம். 3) நிந்தகம். 4) மானியம்.

22. ஒரு ஜனநாயக நாட்டிலே மக்களுக்குள்ள அடிப்படைச் சுதந்திரங்களை மனித உரிமைகள் ........................ தெளிவாக எடுத்துக் கூறுகின்றன.
1) கையேடு. 2) சாசனம். 3) சுவடி. 4) வாசகம்.

★ பின்வரும் வாக்கியங்களுள் இலக்கண வழுவற்ற வாக்கியத்தை தெரிவு செய்க.

23. 1) தமிழ்மொழி தொன்மையும், இனிமையும் நிரம்பியதென்றுணர்ந்து மாணவர் அதனை விரும்பிக் கற்கின்றனர்.
2) தமிழ்மொழி தொன்மையும், இனிமையும் நிரம்பியதொண்டுணர்ந்து மாணவர் இன்று அதனை விறும்பிக் கற்கின்றனர்.
3) தமிழ்மொலி தொண்மையும், இனிமையும் நிரம்பிக் தெற்டுணர்ந்து மாணவர் இண்டு அதனை விரும்பிக் கற்கின்றனர்.
4) தமிழ்மொழி தொன்மையும், இனிமையும் நிரம்பியதென்றுணர்ந்து மாணவர் இன்று அதனை விரும்பிக் கற்கின்றனர்.

24. 1) கூட்டத்திற்கு பளர் சமுகமளித்தனர்.
2) கூட்டத்திற்கு பலர் சமுகமளித்தனர்.
3) கூட்டத்திற்கு பலர் சமூகமளித்தனர்.
4) கூட்டத்திற்கு பலர் சமுகமளித்தனர்.

25. கத்தரி வெருளியா? மனிதனா தோட்டத்தில்,
1) நிற்பவர். 2) நிற்பது. 3) நிற்கும் உரு. 4) நிற்கிறது.

26. உயிர் எழுத்தாகவோ மெய்யெழுத்தாகவோ கணிக்கப்படாதது,
1) நெடில். 2) ஆய்தம். 3) குறில். 4) கட்டு.

27. பின்வருவனவற்றுள் வியங்கோள் வினை விகுதிகளாவன,
1) க, இய, இயர். 2) க, கர், இ. 3) க, இயர், ஈர். 4) க, ஒ, இய.

28. பாசிலை என்பதை பிரித்து எழுதினால்,
1) பாசி + இலை 2) பசுமை + இலை. 3) பா + இலை. 4) பா + சிலை.

29. உயிர்மெய்க் குறிலுக்குரிய மாத்திரை,
1) ஒரு மாத்திரை. 2) அரை மாத்திரை.
3) இரண்டு மாத்திரை. 4) மூன்று மாத்திரை.

30. ஊறுகாயோடு உணவு உண்டார். ஊறுகாய் என்பது,
1) வினைத்தொகை. 2) பண்புத்தொகை.
3) வேற்றுமைத் தொகை. 4) உவமைத் தொகை.

31. காரண இடுகுறிப் பெயர் ............... ஆகும்.
1) பறவை. 2) நாற்காலி. 3) கடல். 4) மண்.

32. ''மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்'' என வள்ளுவர் அறம் பற்றிக் கூறுகிறார். இவ்வாக்கியம்,
1) கூட்டு வாக்கியம். 2) தனி வாக்கியம்.
3) கலப்பு வாக்கியம். 4) தொடர் வாக்கியம்.

33. இக்கவிதை பாரதியால் பாடப்பட்டது என்ற வாக்கியத்தில் பாடப்பட்டது.
1) செயப்பாட்டு வினை. 2) செய்வினை. 3) எதிர்மறை வினை. 4) தன்வினை.

34. ''மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபம்'' இதில் இடம் பெற்றுள்ள அணி,
1) உவமை அணி. 2) உணர்வு நவிற்சி அணி.
3) உருவக அணி. 4) தற்குறிப்பேற்ற அணி.

35. பின்வருவனவற்றுள் இரு பெயரொட்டுப் பண்புத்தொகை,
1) வெந்நீர். 2) கருங்கடல். 3) இருவினை. 4) கதலிவாழை.

36. மாண்டான் என்பதன் பகுதி,
1) மாண்பு. 2) மாண். 3) மான். 4) மாண்டு.

37. பிறர் அறியாதபடி ஒரு கூட்டத்தாருள் வழங்கி வரும்சொல்.
1) இடக்கரடக்கல். 2) குழுஉக்குறி. 3) மங்கலம். 4) போலி.

★ பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சிப்பியில் நல்ல முத்து விளைந்திடும் செய்தி அறியாயோ - நன்னெஞ்சே
குப்பையில் மலர் கொஞ்சும் குருக்கத்திக்கொடி வளராதோ - நன்னெஞ்சே
உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில் உள்ளம் நிறைவாமோ -நன்னெஞ்சே
தெள்ளியதேனிலோர் சிறிது நஞ்சையும் சேர்த்த பின்தேனாமோ - நன்னெஞ்சே
வாழ்வை நினைத்த பின் தாழ்வை நினைப்பது வாழ்வுக்கு நேராமோ - நன்னெஞ்சே
தாழ்வு பிறர்க் கெண்ணத் தானழிவானென்ற சாத்திரங்கேளாயோ - நன்னெஞ்சே

37. சிப்பியில் முத்து விளைந்திடல், குப்பையிலே மலர் கொஞ்சும் குருக்கத்திக் கொடி வளருதல் என்பன கொண்டு உணரக் கூடியது.
1) பெரியோர் உயர்ந்த குடும்பத்தில் தான் பிறப்பார்.
2) பெரியோர் தாழ்ந்த குடும்பத்திலும் பிறப்பார்.
3) பெரியோர் உயர்வு தாழ்வுக்கு அப்பாற்பட்டவர்.
4) பெரியோர் சூழலினால் ஆக்கப்படுகின்றனர்.

38. கள்ளத்தை ஒப்பிட எடுத்துக் கொண்டது.
1) உள்ள நிறைவு. 2) தெள்ளியதேன். 3) நஞ்சு. 4) இனிய பால்.

39. சாத்திரம் என்பது இப்பாடலில் உணர்த்தும் பொருள்,
1) சோதிடம். 2) நீதிநூல். 3) விஞ்ஞானம். 4) சமயம்.

40. பின்வரும் வாக்கியங்களைப் பொருள் புலப்பட ஒழுங்குப்படுத்துக.
1) அந்நிலையில் உலகைச் சுற்றி ஆய்வு நடத்தப் பிரித்தானியக் கப்பல் ஒன்று புறப்பட்டது.
2) ஆனால் டார்வின் சிந்தனை முழுவதும் இயற்கை விஞ்ஞான ஆய்வு பற்றியதாகவே இருந்தது.
3) தந்தையார் தமது அரும்பெரும் மைந்தனைச் சமயத்துறையில் ஈடுபடுத்த எண்ணினார்.
4) அதிலே சேர்ந்து கொண்ட உலகின் பல்வேறு நாடுகளிலும் கண்ட தாவரம் விலங்கு முதலியவற்றைப் பற்றி ஆய்வு நடத்த வாய்ப்புண்டாயிற்று.

1) 1, 2, 3, 4 2) 3, 2, 1, 4 3) 3, 4, 2, 1 4) 2, 3, 4, 1

# கல்வியில் பின்னடைவாகவுள்ள மாணவர்களில் அதிக அக்கறையும் கவனிப்பும் தேவை

யாழ்.அரச அதிபர் குறிப்பிடுகின்றார்

மந்திகை, நவ.29

''சாதனை நிலை நிறுத்தும் மாணவர்களை ஊக்குவித்துப் பாராட்டும் அதே வேளை கல்வியில் பின்னடைவாக உள்ள மாணவர்களையும் ஊக்குவித்து அவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதிலும் அதிக அக்கறை காட்டப்பட வேண்டும். எதிர் காலச் சந்ததியினரை ஒழுக்கத்தால் மேம்பட்ட சிறந்த தலைவர்களாக உருவாக்குவதில் இன்றைய சமூகத்தின் பங்கு மிக முக்கியம் வாய்ந்தது''.

இவ்வாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் குறிப்பிட்டார். யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறையில் 22 பிள்ளைநேயப் பாடசாலைகள் இணைந்து நடத்திய கல்வித்தின விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பருத்தித்துறை வட.இந்து மகளிர் கல்லூரியில் அதிபர் திருமதி சீதாதேவி சண்முகநாதன் தலைமையில் விழா நடைபெற்றது. சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள் ஆசி வழங்கினார்.

அரசாங்க அதிபர் கே.கணேஷ் தொடர்ந்துரையாற்றுகையில் குறிப்பிட்டவை வருமாறு:-

எதிர் காலத்தில் இன்றைய மாணவர்கள் நல்ல பிரஜைகளாக நாட்டை சுபீட்சப் பாதைக்கு இட்டுச் செல்லக்கூடிய தலைமைத்துவப் பண்பை கொண்டவர்களாக [illegible] கல்விச் சமூகம் இதனைச் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். தென்பகுதியில் வாழும் மாணவர்களின் வசதிகள் எமது மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை. அப்படியிருந்தும் எமது மாணவர்கள் அரிய சாதனைகளை நிகழ்த்துகின்றனர். இச்சாதனைகள் பாராட்டப்பட வேண்டும். இவர்களது சாதனைகள் மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கான சேவைகளை வழங்கி வருகின்றன. கல்வி அபிவிருத்திக்கு யுனிசெவ் பல்வேறு திட்டங்களை நடை முறைப்படுத்தி வருகின்றது. இந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புக்கள் மேலும் மேம்பாடடைய வேண்டும். யுத்த அனர்த்தங்களாலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரச சார்பற்ற நிறுவனங்கள் பெருந்தொகை நிதியைப் பெறுகின்றன. இந் நிறுவனங்கள் மக்களின் தேவைகளைச் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். அவர்களின் செயற்பாடுகள் ஒழிவு மறைவின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். அப்படிச் செயற்படுவதன் மூலமே மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய நிலை ஏற்படும். யாழ்.செயலகம் மாதாந்தம் 45 அரச சார்பற்ற நிறுவங்களின் செயற்பாட்டறிக்கைகளை அரசாங்கத்திற்கு அனுப்பி வருகின்றது. மக்களுக்கு இச் சேவைகளின் உச்சக் கட்டப் பயன்பாட்டிற்கான உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்-என்றார். (202-218)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பகுதி-II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. சுருக்கமான விடை எழுதுக.
1) வாக்கிய வகைகள் இரண்டினை குறிப்பிடுக?
2) இறந்த கால இடைநிலைகள் எவை?
3) இடைச்சொற்களின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?
4) அழைப்பிதழ் ஒன்றில் அடங்க வேண்டிய அம்சங்கள் எவை?
5) தன்குஞ்சைக் காணாது அழுத ஆக்காட்டிக் குருவியின் கண்ணீர் வயல்களில் பாய்ந்து நிறைந்து வழிந்தது. இவ்வாக்கியத்தில் உள்ள அணியை விளக்குக?
6) நாவலுக்கும் சிறுகதைக்கும் உள்ள வேற்றுமைகள் இரண்டினைக் குறிப்பிடுக?
7) அறிக்கை எழுதும் படிமுறைகள் எவை?
8) தொகை நிலைத் தொடர்கள் நான்கினைக் குறிப்பிடுக?
9) விளம்பரம் செய்வதற்கான நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?
10) தொடர்பாடலுக்காக பயன்படுத்தப்படும் ஊடகங்கள் எவை?

02. பின்வருவனதற்றுள் ஏதாவதொன்றினைத் தெரிவு செய்து 250 சொற்களில் எழுதுக.

1) ஒரு நாடு அபிவிருத்தியடைந்துள்ளது உன்று கூறும் பொழுது அந் நாட்டின் கல்வி நிலை உயர்வடைந்துள்ளது. என்பதை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். ஒருநாட்டின் அபிவிருத்தி பொருளாதார, அரசியல், சமூக சமயரீதியில் நோக்கப்பட்டாலும் அவை அனைத்திற்கும் அடிப்படைக் காரணமாகக் கல்வியே அமைகின்றது. என்பதை மறுக்கவியலாது. இது பற்றிய உமது கருத்தை வெளிப்படுத்தி ஒரு கட்டுரை எழுதுக.

2) நாம் பிரயாணம் செய்வதற்கு அத்தியாவசியமாக விளங்குவது போக்குவரத்தாகும். அந்த போக்குவரத்தின் அவசியத்தினை அறிந்து நாம் செயற்பட வேண்டும். போக்குவரத்து சேவையனாலேயே எம்மால் நினைத்த இடத்திற்கு நினைக்கும் நேரத்தில் செல்ல முடியும். இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தனியார் போக்குவரத்து சேவையை விரும்பும் ஒருவருக்கும் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவையை விரும்பும் ஒருவருக்கும் இடையில் இடம் பெறும் உரையாடல்.

3) கடனில்லாக் கஞ்சி கால் வயிறு போதும்சு என்ற பழமொழியின் பொருளை விளக்கும் வகையில் வாசகரின் உள்ளத்தை ஈர்க்கும் ஒரு கற்பனைச் சிறுகதை.

4) மக்கள் காடுகளை இயல்பாகவே இலகுவில் அழித்து விடுகின்றனர் காட்டில் மட்டுமன்றி வழிடங்களிலுமுள்ள மரங்களைக் கூட வெட்டுகின்றனர். இதனால் தமக்கே அழிவு என உணர்ந்துங் கூட பலர் காடழிப்பில் ஈடுபடுவது தான் வியப்புக்குரியது மரங்களை அழிப்பதில் மனிதன் காட்டும் வேகம் மரங்களை நாட்டுவதில் இல்லை காடழிப்பதனால் ஏற்படும் தீய விளைவுகளை நாம் உணர்ந்து செயற்பட வேண்டுமென்பதனை வலியுறுத்தி தமிழ் மன்றத்தில் நிகழ்த்தும் சொற்பொழிவு.

III. பின்வரும் பந்தியை வாசித்து அதன் சாராம்சத்தை மூன்றில் ஒரு பங்காக சுருக்கி எழுதுக.

பொருளியல் வழி இயங்கும் வெறும் இயந்திரம் அல்ல மனிதன். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து வந்த ஒரு பண்பாட்டின் உற்பத்தி. அவன் வளர உதவிய பண்பாட்டினை வளர்க்கும் சக்தியும் அவனிடம் உண்டு பல்வேறுபட்ட துறைகளில் பண்பாட்டுக்கு வளர்ச்சிக்கு அவன் ஆற்றியுள்ள தொண்டினைக் கொண்டுதான் அவனை நோக்குதல் வேண்டும் தான் தானாக வாழவும் தன் பிற்சந்ததியினர் வாழவும் அவன் தன் கருத்துக்களைப் பொறித்துள்ளான். அக்கருத்துக்களின் வெளிப்பாட்டு சாதனமே மொழி. அக்கருத்து வெளிப்பாட்டிற்கு உருக் கொடுத்து உதவி நிற்பது அவன் பண்பாடு எனவே மொழியும் பண்பாடும் பிரிக்கா முடியா வண்ணம் பின்னிப்பிணைந்து கிடக்கின்றன. பண்பாடு என்பது ஒரு சமூகமோ அல்லது குறிப்பிட்ட ஒரு குழுவோ நாகரிகத்தின் எத்தன்மையை அடைந்திருக்கின்றது. என்பதே அவன் பண்பாடு இல்லாதவன் என்று நாம் ஒருவனைக் குறிக்கும் போது அவனிடம் நாகரிக வாழ்வின் பண்புகள் என்ற இல்லையென்ற முடிவுக்கே வருகிறோம் நாகரீகம் வளர்ச்சியடைந்த போது மக்களின் பண்பாடும் வளர்ந்து கொண்டே வருகிறது. புராதன நாகரிகங்களைப் பற்றி நாம் படிக்கும் போது அவைகளின் பண்பாட்டைப் பற்றித் தான் படிக்கின்றோம்.

IV. பின்வரும் பந்தியை அவதானித்து விடை எழுதுக.

குடியாட்சி முறை நல்ல முறை. நாகரிக வளர்ச்சியின் பயனாக உலகம் பெற்ற புதிய முறை அது எல்லோர்க்கும் ஒத்த உரிமை என்பது மனித இனம் நெடுங்காலமாகக் கண்டுவரும் கனவாகும். அந்த நல்ல கனவை ஓரளவு நனவாக்கிக் காட்ட முயல்வது குடியாட்சி முறை அரசியலில் ஒத்த உரிமை என்பது ஓரளவு தான் இருக்க முடியும் அந்த எல்லையைக் கடந்து சென்றால் அது நாட்டுக்கே தீமையாய் முடியும் நாட்டிற்கு வேண்டியதைச் சொல்ல ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு ஆனால் நாட்டிற்கு வேண்டியதைச் செய்ய சிலரிடம் தான் அதிகாரம் இருக்க வேண்டும் புகையிரதம் எந்த ஊருக்கு எந்த வழியாகச் செல்ல வேண்டும் என்று கூறப் பலருக்கு உரிமை இருக்கலாம் அந்த ஊருக்கு அந்த வழியாக அதை ஓட்டிச் செல்லும் பொறுப்பு சிலரிடம் தான் சாரதி காவலாளர் என்பவரிடம் தான் இருக்க வேண்டும் இவ்வாறு எல்லை வகுத்துக் கொண்டாலன்றி குடியாட்சி முறை நன்மை செய்யாது புகையிரதம் ஓடும் போது குறுக்கிட்டு ஓட்டுபவருக்கு இடையூறு செய்தால் எல்லாரும் செயலாற்றுவதற்கு பெற்றுள்ள உரிமையை ஒவ்வொருவரும் செயலாற்றுவதற்குப் பயன்படுத்தத் தொடங்கினால் குடியாட்சி படு தோல்வியாகும்.

1) இப்பகுதியில் கூறப்படும் மையக்கருத்து யாது?
2) குடியாட்சி முறையின் கனவு எதுவென கூறப்பட்டுள்ளது?
3) இப்பகுதியில் புகையிரதம் பற்றிக் கூறப்படுவதற்கான காரணம் யாது?
4) இப்பகுதிக்கு பொருத்தமான தலைப்பு இடுக?
5) ஒத்த பொருள் தருக?
குடியாட்சி, இடையூறு.

V. உமது பிரதேசத்தில் வேகமாகப் பரவிவரும் சிக்கன் கூனியர் நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் 100 சொற்களில் அமையும் துண்டு பிரசுரம் ஒன்றை எழுதுக?

அல்லது

கடந்த மாதம் உமது பாடசாலையில் இலக்கிய மன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகவும் நீர் அம்மன்றச் செயலாளராகக் கடமையாற்றியதாகவும் கருதி இம்மாதம் நடைபெறவிருக்கும் இலக்கிய மன்றத்தில் நீர் வாசிக்க இருக்கும் அறிக்கை (ஏறத்தாழ 100 சொற்களில் எழுதுக).

## தமிழ் மொழியும் இலக்கியமும்
## பகுதி - III

★ 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 வினாக்களில் ஏதாவது ஒன்றுக்கும் விடை எழுதுக.
★ இவ் வினாத்தாளுக்கான மொத்தப் புள்ளி 80 ஆகும்.

01. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சுருக்கமான விடை தருக.
1) கல்வியே அழியாச் செல்வம் என்ற கட்டுரையின் ஆசிரியர் யார்?
2) நான்மணிக் கடிகையின் சிறப்பு யாது?
3) முத்தொள்ளாயிரம் என்ற பெயர்வரக் காரணம் யாது?
4) பழமொழி நானூறு என்ற நீதிநூற் சிறப்பு யாது?
5) இடைச்சி தந்த மோரின் இயல்பை எடுத்துக் கூறிய புலவர் யார்?
6) நெடுங்கதவுமஞ்சலென்ற சொல்லும் என்னும் அடியினைச் சந்தி பிரித்து எழுதுக?
7) சோழ சாம்ராஜ்யத்தின் ஆஸ்தான கவி யார்?
8) கன்லியானாகிற் கடி மாலை என்னும் அடியில் உள்ள உரிச் சொல் எது?
9) தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன?
10) ''விலங்கொடு மக்கள் அனையர்
இலங்கு நூல்
கற்றாரோடு ஏனையவர்.''
எனும் குறளைத் தாங்கி நிற்கும் அதிகாரம் எது?

02. பின்வரும் செய்யுள் மற்றும் உரைப்பகுதியில் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழி நடையில் எழுதுக.
தடித்த எழுத்திற் தரப்பட்டவற்றின் சிறப்புக்களை எழுதுக.

அ) ''அற்ற குளத்தில் அறு நீர்ப் பறவை
போல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்
குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு''

ஆ) ''பூணுக் கழகளிக்கும் பொற்றொடியைக்
கண்டக் கால்
நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர் -
நீணிலத்து
மற்றேவர் வாராதார் வானவரும்
வந்திருந்தார்
பொற்றேர் நளனுருவாய்ப் போந்து''

இ) ''கற்றறிவார் கண்டது அடக்கம்
அடங்காதார் சொச்சாத்துந்
தம்மைப் புகழ்ந்துரைப்பார்'' என்றபடி நாம் சிறிதும் பெருமை பாராட்டாமலும் செருக்கு அடையாமலும் பணிந்த சொல்லும் பணிந்த செயலும் உடையமாய் எல்லா உயிர்களிடத்தும் அன்பும் இரக்கமும் காட்டி வாழ்தல் வேண்டும்.

ஈ) ''வீறுசால் மன்னர்
விரிதாம வெண்குடையைப்
பாற எறிந்த
பரிசயத்தால் - தேறாது
செங்கண்மாக் கோதை
சினவெங் களியானை
திங்கள் மேல் நீட்டுந்தன் கை''

03. நளவெண்பா பாற் பகுதியினை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
(i) சுயம்பர மண்டபத்தில் நளனை தமயந்தி கண்டறிந்து கொண்ட விதத்தினை தெளிவுபடுத்துக.
(ii) நளன் தமயந்தி சூட்டிய மாலையைச் சூட்டி கொண்டிருந்ததினை கண்ட வேந்தர்களின் நிலைப்பாடு யாது? அதனை எவ்வாறு எடுத்துரைக்கிறார்.

அல்லது

கவிச்சக்கரவர்த்தி என்ற பாடத்தினை அடிபொற்றி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
(i) ஒட்டக் கூத்தரின் கர்வத் தன்மையை வெளிப்படுத்தப்படும் இடங்களைத் தெளிவு படுத்துக.
(ii) கம்பனிற்கும் சடையப்ப வள்ளலிக்கும் இடையிலான தொடர்பை எடுத்துக் கூறுக.

04. நீதிப்பாடல்கள் என்ற பாடத்தினை அடிபொற்றிப் பின்வரும் வினாக்களுக்கு தருக.
(i) சிறு தொழிலையும் முயற்சியோடு திருத்தமாகச் செய்ய வேண்டும் என்பதற்கு நாலடியாரில் கூறப்பட்டுள்ள கருத்து யாது.
(ii) பின்வரும் குறள்களின் பொருளைத் தருக.
(அ) சொல்லுக சொல்லைப் பிறிது ஓர் சொல்
அச் சொல்லை வெல்லும் சொல்
இன்மை அறிந்து
(ஆ) சொல்லுக சொல்லில் பயன் உடையர்
சொல்பற்க சொல்லில்
பயன் இலாய் சொல்

அல்லது

(i) ஒரு பதிவிரதையின் சரித்திரம் என்னும் கதையில் வரும் பாத்திரங்களின் குணப் பண்புகளை எடுத்துக் கூறுக.
(ii) சந்நியாசிக்கும் கசாப்புக் கடைக் காரனிற்கும் இடையிலான வேறுபாட்டினைச் சுருக்கமாக தருக.

5,6,7 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

05. சேர மன்னன் உலாவருவதைக் காணச் சென்ற பெண்ணினை வர்ணிப்பதில் காணப்படும் சிறப்புக்களை எழுதுக.

06. தனிப்பாடற்றிரட்டில் கம்பரால் திருவெண்ணெய் நல்லூர் எவ்வாறு சிறப்பித்து கூறப்பட்டுள்ளது.

07. கு.அழகிரிசாமியால் எழுதப்பட்ட கவிச்சக்கரவர்த்தி என்ற பாடத்தில் வரும் பிரதான பாத்திரங்களும் அவற்றின் குணவியல்புகளையும் தருக.



தீவக வலயக் கல்வி அலுவலகத்தால் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தில் விசேட கல்வி அலகு திறந்து வைக்கப்பட்டுள்ளது. திறப்புவிழா வைபவத்தில் காரைநகர் இலங்கை வங்கி முகாமையாளர் இ.சிவகுமார் விசேட கல்வி அலகிற்கான வகுப்பறையை நாடாவெட்டி திறந்து வைக்கிறார். (ரவி)



யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயத்தில் தேச நிர்மாண அமைச்சும் உலக உணவு நிறுவனமும் இணைந்து நிர்மாணித்த சமையல் கூடக் கட்டடத்தை யாழ்.கல்வி வலய பாடசாலை வேலைப் பகுதிப் பொறியியலாளர் ஜி.சிவபாலன் திறந்து வைப்பதையும் அருகில் அதிபர் மு.முரளிதரன் உட்பட கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் நிற்பதையும் காணலாம். (படம்:லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில் ஈராண்டு...



## அமரர் கந்தையா
# இராசேந்திரம்
## (வைரமுத்து மாமா)

மண் மகிழ்
20.07.1929

மனம் நெகிழ்
22.11.2006

திதி: துதியை

கண்கண்ட தெய்வமே எம் அப்பாவே!
வாழ்வில் மாண்புடன் வாழ்ந்து
நாங்கள் சிறப்புடன் வாழ்வதற்கு வழிகாட்டி
உறவுகளுக்கெல்லாம் உற்ற துணையாய் இருந்து
வாழ்ந்து வழிகாட்டி எல்லோரையும் தவிக்க விட்டு
சென்று ஆண்டுகள் இரண்டு ஆகிவிட்டதப்பா!

குடும்பத்தினர்.
830, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "நிஷா" சூறாவளித் தாக்கத்தின் பதிவுகள்.....



சண்டிலிப்பாய் - தொட்டிலடி வீதியின் குறுக்கே சாய்ந்த பாரிய ஆலமரம்



சண்டிலிப்பாயில் காற்றினால் சாய்ந்த வாழைத்தோட்டங்களில் ஒன்று...



திருநெல்வேலியில் வெள்ளத்தில் மூழ்கிப்போன எரிபொருள் நிரப்பு நிலையம்.



மானிப்பாய் பிரதேச சபை முன்பாக மின் கம்பத்தில் சாய்ந்துள்ள தென்னைமரம்




வெள்ளத்தின் மத்தியில் பயணிக்கும் மக்கள்



வயல் எது வீதி எதுவென்று தெரியாதவாறு வெள்ளத்தில்....



வெள்ளத்தில் மூழ்கியுள்ள வீடு



வெள்ளக் காடாக நெல் வயல்கள்



சண்டிலிப்பாய் வயல் வெளியில் வீதியை மேவிப் பாயும் வெள்ளம்



பறாளாய் முருகன் கோவிலுக்குச் செல்லும் வீதியும், வயல்களும் வெள்ளம் நிரம்பிய நிலையில்...



வழக்கம்பரையிலுள்ள மிகப் பழமை வாய்ந்த ஆல மரங்கள்...



வழக்கம்பரை அம்மன் ஆலயத்துக்கு அருகில் வீதியின் இரு மருங்குகளிலும் நின்ற ஆலமரங்கள் எல்லாம் அடியோடு சாய்ந்து விட்டன. அவற்றுள் ஒன்று இது.



யாழ்.பண்ணையின் நேற்றைய கோலம்.....

( [illegible] லக்ஸ்மன், நேசன், காந்தன், சுதேசிகன், ஓளண்யன் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடாநாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை பெய்த காற்றுடன் கூடிய பெருமழையால் அத்தியாவசிய சேவைகளான போக்குவரத்துச் சேவையும் குடிதண்ணீர் வழங்கல் சேவையும் பாதிக்கப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவை ஓரளவு சீரடைந்திருப்பதையும், வைத்தியசாலைக்கான குடிதண்ணீர் சேவையை அதிகாரிகள் சீரமைப்பதையும் படங்களில் காணலாம். [படங்கள்: கதேசிகன்]

# எவரையும் தப்பவிடாமல் பாதித்த வெள்ளமும் புயலும் குடாநாட்டின் சகல பகுதிகளும் பேரவலத்தில்

இரு நாள்களுக்குள் சோனாவாரியாகப் பொழிந்த மழை யாருமே எதிர்பாராத அளவுக்குப் பெருவெள்ளமாகி வீடுகளுக்குள் நுழைந்த அனுபவம் யாழ்ப்பாணத்தின் எல்லாப் பிரதேசங்களிலும் பேரவலத்தை ஏற்படுத்தியுள்ளது.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ள வெள்ள நீரும், பேரோசையுடன் சுழன்றடித்து ஊழித் தாண்டவமாடிய புயற்காற்றும் விளைவித்த சேதங்கள் எண்ணிலடங்காதவை.

ஒல்லாந்தர் காலத்திலும், ஆங்கிலேயர் காலத்திலும் நடப்பட்ட பல நூற்றாண்டுகள் நின்று நிலைத்த பெருவிருட்சங்களெல்லாம் வேரோடு சாய்ந்து போயின. குறிப்பாக, ஆலயங்களை அண்மித்து வளர்க்கப்பட்டவையும், தெய்வங்களாகப் போற்றி உருவகிக்கப்பட்டவையுமான பெரிய அரச மரங்கள், வேப்பமரங்கள் என்பன மண்ணிற் சரிந்து வீழ்ந்தன. பிரதான வீதிகளிலும், உள் ஒழுங்கைகளிலும் மரங்கள் முறிந்து வீழ்ந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. பல இடங்களிலும் மின்சாரக் கம்பங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன் மின்கம்பிகளும் அறுந்து தொங்குகின்றன. அவ்வாறே தொலைத் தொடர்புக் கம்பிகளும். இதனால் மின்சாரம் மற்றும் தொலைபேசி சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

வெள்ளம் பாதிக்காத, புயற்காற்றால் பாதிக்கப்படாத இடமெதுவும் இல்லையெனுமளவுக்கு ஒட்டுமொத்த குடாநாடும் இப்பேரனர்த்தத்தில் சிக்கியுள்ளது. மேட்டுநிலப் பகுதிகளில் வெள்ளம் வடிந்துள்ளபோதும் தாழ்நிலங்களில் வீடுகளை நிறைத்தும், வீதிகளை மூடியும் வெள்ளம் காணப்படுகின்றது. பல இடங்களிலும் வீதியை மேவி வெள்ளம் பாய்வதைக் காணமுடிகின்றது.

வெள்ளத்தால் கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்ட சம்பங்களும், தொடர் வெள்ளப் பாதிப்பால் வீட்டு மிருகங்களும், கால்நடைகளும், வளர்ப்புக் கோழிகளும் இறந்த சம்பவங்களும் அதிகமாகும். பெருமளவில் கோழிகள் இறந்துள்ளதால் பல இலட்ச ரூபா நஷ்ட மேற்பட்டுள்ளதாக கோழிப்பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, அரிசி ஆலைகளில் தயாராக்கப்பட்ட புழுங்கல் அரிசி தொட்டியில் நனையவிட்ட நிலையிலும், காயவிட்ட நிலையிலும் அழிவடைந்துள்ளதாக அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளத்தின் பெரும் பிரதான பாதிப்பு விவசாயிகளுக்கேயாகும். நெற்செய்கை நிலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதோடு பயிர்கள் வெள்ளத்தில் அடித்தும் செல்லப்பட்டுள்ளன. மரக்கறிப் பயிர்களும் அவ்வாறே. மரக்கறிகளின் விலைகள் இப்போதே கிடுகிடுவென உயர்ந்துவிட்டன. இந்நிலையில் அடுத்துவரும் மாதங்களில் அரிசி, மரக்கறிகள் விலைகள் உயர்ந்து சாமானிய குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதிப்படையச் செய்யப்போகின்றன.

### சுகாதாரக்கேடு

வெள்ளம் சார்ந்த மனித அவலங்கள்

**செய்திக்கட்டுரை**

இன்னமும் குறைந்தபாடில்லை. கழிவகற்றும் வசதிகளின்றிப் பலரும் அவதிப்படுகின்றனர். மலக்குழிகளெங்கும் நீர் நிறைந்துள்ளதால் இந்த அவலம் நேர்ந்துள்ளது. அதேபோல கிணறுகளெல்லாம் வெள்ளநீரால் நிரம்பியுள்ளதால் குடிதண்ணீருக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. மழைநீரால் நனைந்துபோன நிலையில் விறகுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. வீடுகளில் அடுப்பு மூட்டும் வசதியில்லாததால் பாணுக்கு மக்கள் அலைந்து திரிந்ததைக் காணமுடிந்தது.

அதேவேளை மண்ணெண்ணெய் அடுப்புக்கள் அதிகளவில் விற்பனையானதாகவும், பல இடங்களிலும் மண்ணெண்ணெய் அடுப்புகள் விற்றுத் தீர்ந்துவிட்டதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் மண்ணெண்ணெய் விநியோகம் குறிப்பிட்ட சில எரிபொருள் நிரப்பு நிலையங்களிலேயே இடம்பெற்றது. அங்கு நீண்ட வரிசையில் பொதுமக்கள் காத்திருந்ததையும் காண முடிந்தது.

வெள்ளத்தினால் முறிந்த மரங்களையும், சரிந்த வேலிகளையும் உடைந்த கட்டடங்களையும் சீர்செய்யும் நடவடிக்கைகள் ஒருபுறம் நடந்துகொண்டிருக்க, மறுபுறம் எப்போது வெள்ளநீர் வடிந்து தமது வீடுகளுக்குச் செல்லலாம் என்ற அங்கலாய்ப்போடு நலன்புரிநிலையங்களில் தங்கியிருக்கும் மக்கள் உள்ளனர்.

### வெள்ளத்துக்குப் பின்னான பாதிப்பு

வெள்ளம் மற்றும் புயலின் நேரடிப் பாதிப்புக்கள் சில நாள்களில் குறை[illegible] விடும். அதன் பின்னான பாதி[illegible]ள சாமானிய மக்களைப் பாதிப்படையச் செய்யப்போகிறது. நோய்த்தாக்கம், புனரமைப்புக்கான செலவு, பொருள்களின் விலையுயர்வு என அடுத்தடுத்துவரும் பல சுமைகளை -துன்பச் சிலுவைகளை சுமக்கும் நிர்ப்பந்தம், யுத்தத்தினால் நைந்துபோய் நிமிரமுடியாதிருக்கும் சாதாரண மனிதனைச் சூழப்போகிறது.

இந்நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர் எனச் சிறிய தொகையினருக்கு நிவாரணங்களை அளித்துவிட்டு தமது கடமை முடிந்ததாக அரச நிர்வாகம்

**ஸ்ரீகுமரன்**

திருப்திப்பட்டுக்கொள்ள முடியாது. வெள்ளம் மற்றும் புயற்பாதிப்பு எல்லா வீடுகளுக்கும் குடாநாட்டின் ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு வீட்டையும் பாதித்துள்ளது. எனவே, யாழ்ப்பாணத்திலுள்ள அனைவருக்கும் நிவாரணங்களை வழங்கவேண்டியது இன்றியமையாததாகும். அதற்கு மேலதிகமாக வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளவர்களுக்கு விசேட உதவிகளை வழங்குவதும் அவசியமாகும்.

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணம், நவ.29

அண்மையில் பெய்த அடைமழை காரணமாக நூற்றாண்டு கால விருட்சங்கள் பல, பல இடங்களில் வேருடன் பாறி வீழ்ந்தமை அனைவருக்கும் தெரிந்த செய்தி.

அதனைச் சாட்டாக வைத்து மழைக்கும் காற்றுக்கும் ஈடு கொடுத்து அசையாமல் நின்ற சில மரங்கள் விஷமிகள் சிலரால் வேருடன் தறித்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தைச் சுற்றி நின்ற மரங்கள் சிலவே இவ்வாறு தறித்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

யாழ்.மத்திய கல்லூரி வாசலில் நின்ற விருட்சங்களில் ஒன்றிரண்டு மழை காரணமாக வேருடன் சரிந்தன. யாழ். நூலக வாசலில் நின்ற மரங்கள் அசையாமல் நின்றன. இயற்கையின் சீற்றத்துக்குக்கும் அசையாமல் நின்ற மரங்கள் சில விஷமிகள் சிலரால் வேருடன் தறித்து, வாளால் சீவி துண்டுகளாக்கி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

(50-120)

## வீதிகளையும் விட்டுவைக்கவில்லை விடாது பெய்த பெருமழை!

கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த கடும்மழை காரணமாக யாழ்.குடாநாட்டின் பிரதான வீதிகள் பலவும் கடும் சேதங்களுக்குள்ளாகி உள்ளன.

மழையினால் கரைபுரண்டு ஓடிய பெருவெள்ளதத்தால் அரிப்புக்குள்ளாகி பிரதான வீதிகளின் இரு மருங்கிலும் தூர்ந்து போயுள்ளன. இது தவிர குன்[illegible], குழி[illegible]களும் வீதிகளில் தோன்றியுள்ளன.

வல்லை வீதி, கே.கே.எஸ்.வீதி, [illegible] பத்திரி வீதி, பலாலி வீதி, மானிப்பாய் [illegible] காரைநகர் வீதி, தீவக[illegible] பிர[illegible] வீதி என்பன உட்பட [illegible]நாட்டில[illegible] மக்கள் போக்குவரத்[illegible] அதி[illegible] படுகின்ற வீதிகள் எல்லாமே [illegible]டைந்து காணப்படுகின்றன.

(4)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பையில் நேற்றும் தொடர்ந்தது தீவிரவாதிகளின் கோரத்தாண்டவம்

## இதுவரை 127 பேர் பலியாகினர்; பணயக்கைதிகளை மீட்டெடுக்க முப்படையினர் கடும் பிரயத்தனம்; துப்பாக்கிச் சண்டை நீடிப்பு

மும்பை, நவ. 29

மும்பையில் பயங்கரவாதிகளுக்கும்; பாதுகாப்புப் படையினருக்கும் இடையே 3ஆவது நாளாக நேற்றும் கடும் சண்டை நடைபெற்று வருகிறது. அங்கு முப்படையினரும் குவிக்கப்பட்டு பணயக்கைதிகளை மீட்க கடும் பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


மும்பை நரிமன் இல்லத்தில் பதுங்கியுள்ள பயங்கரவாதிகளை பிடிப்பதற்காக ஹெலிகொப்டரில் இருந்து கயிற்றின் வழியாக கொமாண்டோ படையினர் உள்நுழைந்துள்ளனர். இதனிடையே நரிமன் இல்லத்தில் நேற்றுக் காலை அடுத்தடுத்து 3 குண்டுகள் வெடித்தன.

பயங்கரவாதிகளின் இந்தத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 127 ஆக அதிகரித்துள்ளதுடன், பல நூற்றுக் கணக்கானோர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதில் 5 உயர் அதிகாரிகள் உட்பட 11 பொலிஸாரும் பலியாகியுள்ளனர்.

மும்பையில் கடந்த புதன் இரவு பயங்கரவாதிகள் தாஜ் ஹோட்டல், டிரைடன்ட் ஹோட்டல் மற்றும் நரிமன் இல்லம் ஆகியவற்றுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர். மேலும் அந்த ஹோட்டல்களில் இருந்தவர்களை பிணைக்கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

தாஜ் ஹோட்டலில் பிணைக் கைதிகளாக இருந்த அனைவரும் மீட்கப்பட்டுள்ளனர் என்று மும்பை பொலிஸ் கமிஷனர் ஹசன் கபூர் கூறியுள்ளார்.

எனினும் அந்த ஹோட்டலுக்குள் நுழைந்த பயங்கரவாதிகள் பிடிபட்டார்களா அல்லது கொல்லப்பட்டார்களா என்பது பற்றி அவர் தகவல் தெரிவிக்க மறுத்து விட்டார்.



பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளைப் பிடிக்க ஹெலிகொப்டர் மூலம் மும்பை நாரிமன் ஹோட்டலுக்குள் இறங்கும் கொமாண்டோ படைவீரர்.

இதனிடையே டிரைடன்ட் ஹோட்டல் மற்றும் நரிமன் இல்லத்திற்குள் பயங்கரவாதிகள் பதுங்கியிருந் கின்றனர் எனவும் அங்குள்ள பிணைக்கைதிகளை மீட்கும் நடவடிக்கையில் கொமாண்டோ படையினர் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

விரைவில் பயங்கரவாதிகள் அனைவரும் பிடிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்படும் என்றும் அவர் தெரிவித்தார். தாஜ் ஹோட்டலில் நடைபெற்ற மோதலில் என்.எஸ்.ஜி. கொமாண்டோ வீரர் ஒருவர் படுகாயமடைந்திருக்கிறார் எனவும், மும்பை பொலிஸ் கமிஷனர் கூறியுள்ளார்.

டிரைடன்ட் ஹோட்டலில் நேற்று முன்தினமிரவு முதல் துப்பாக்கி சுடும் சத்தமோ, குண்டு வெடிப்புச் சத்தமோ கேட்கவில்லை என்றும் அங்கு ஒவ்வொரு அறையாக சென்று பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர் என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாஜ் ஹோட்டலின் 8ஆவது மாடியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தபோது வீரர் ஒருவர் காயமடைந்தார்.

தாஜ் மற்றும் ஒபராய் ஹோட்டல்களில் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என்றும் மும்பை பொலிஸ் கமிஷனர் மேலும் கூறியுள்ளார்.

தாஜ் ஹோட்டலில் நடத்தப்பட்ட வேட்டையில் நேற்றுமுன்தினமிரவு பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவர் உட்பட 3 பயங்கரவாதிகள் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். டிரைடன்ட் ஹோட்டலிலிருந்து பயங்கரவாதிகள் அனைவரும் அகற்றப்பட்டு விட்டனர் என்றும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதனிடையே நரிமன் இல்லத்தில் அப்பாவி மக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ள பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நேற்றுக் காலை கொமாண்டோ படையினர் ஹெலிகொப்டரில் இருந்து நரிமன் இல்லத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர் எனவும் வீரர்கள் சிலர் ஹெலிகொப்டரில் இருந்து கயிற்றின் வாயிலாக இறங்கி நரிமன் இல்லத்திற்குள் நுழைந்திருக்கின்றனர் எனவும் நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

அப்போது நரிமன் இல் லத்திற்கு அருகே உள்ள கட்டடத்தில் இருந்து பாதுகாப்புப் படையினர் பயங்கரவாதிகளை குறி வைத்து சுட்டனர் எனவும் தெரிகிறது.

இதனிடையே நேற்று அதிகாலை நரிமன் இல்லத்தில் அடுத்தடுத்து 3 கையெறி குண்டுகள் வெடித்தன என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. 10 முதல் 15 நிமிட இடைவெளிக்குள் 2 குண்டுகள் வெடித்தன எனவும், 3ஆவது குண்டு நேற்றுக்காலை 4.47 மணிக்கு வெடித்தது எனவும் தெரிகிறது.

நரிமன் இல்லத்தில் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும், இது விரைவில் முடிவுக்கு வரும் என்றும் தேசிய பாதுகாப்பு படை தலைவர் ஜே.கே. தத் கூறியுள்ளார்.

இதனிடையே நேற்று முன்தினமிரவு தொடங்கி, 3 நாட்களாக நடைபெற்று வரும் பயங்கரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 127 ஆக அதிகரித்துள்ளது.

### ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பான

# பிரதமர்–தமிழக எம்.பிக்கள் சந்திப்பு டிச. 2ஆம் திகதிக்குத் தள்ளிவைப்பு

சென்னை, நவ.29

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து பிரதமரை சந்திப்பதற்காக டில்லி செல்லும் தமிழக எம்.பிக்களின் பயணத்தில் மாற்றம் செய்யப்பட்டு, டிசம்பர் 2ஆம் திகதி சந்திக்க முடிவு செய்துள்ளனர்.

இலங்கையில் நடைபெறும் போரை நிறுத்துமாறு, பிரதமரை வலியுறுத்த தமிழகத்தை சேர்ந்த அனைத்துக்கட்சி தலைவர்கள் தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில், அடுத்து மாதம் (டிசம்பர்) 4ஆம் திகதி டில்லியில் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்திப்பது என்றும், அதற்கிடையே நவம்பர் மாதம் 28ஆம் திகதி (நேற்று) தமிழகத்தை சேர்ந்த அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரை சந்திப்பது என்றும் சென்னையில் நடைபெற்ற சட்டமன்ற அனைத்து கட்சிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில், தமிழக எம்.பி.க்கள் டில்லி செல்லும் பயணத்தில் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது.

இதுகுறித்து முதல்வர் அலுவலகம் வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பிரதமரைச் சந்திக்க தமிழக எம்.பி.க்கள் டில்லி செல்லும் பயணத்தில் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. டிசம்பர் மாதம் 2ஆம் திகதியன்று பிரதமரை தமிழக எம்.பி.க்கள் சந்திப்பார்கள்.

முதல்வர் தலைமையில் அனைத்துக்கட்சி தலைவர்கள் பிரதமரை டிசம்பர் மாதம் 4ஆம் திகதி சந்திப்பார்கள் - என்றுள்ளது.

# மும்பையில் மன்மோகன்–சோனியா



மும்பை, நவ.29

தீவிரவாதிகளின் தாக்குதல்களால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், சம்பவங்களால் காயமடைந்தவர்களுக்கும் பிரதமர் மன்மோகன் வியாழக்கிழமை இரவு நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தார்.

மும்பை ஜே.ஜே. வைத்தியசாலைக்குச் சென்ற அவர், பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து, உங்களின் வலிகளையும், வேதனைகளையும் முழுவதும் உணர்ந்துள்ளேன் என குறிப்பிட்டு ஆறுதல் கூறினார். அவருடன் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி, மத்திய அமைச்சர்கள் சிவராஜ் பாட்டீல், சரத் பவார், முரளி தேவ்ரா, மகாராஷ்டிர மாநில ஆளுநர் எஸ்.சி. ஜமீர், மாநில முதல்வர் விலாஸ் ராவ் தேஷ்முக், துணை முதல்வர் ஆர்.ஆர். பாட்டீல் மற்றும் சமாஜ்வாடி கட்சியின் செயலர் அமர் சிங் ஆகியோர் சென்றிருந்தனர்.

# சீமான் வீட்டில் பிரபாகரனின் பிறந்தநாள் விழா பிரியாணி சாப்பிட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள்



சென்னை, நவ.28

வளசரவாக்கத்தில் உள்ள இயக்குநர் சீமான் வீட்டில் பிரபாகரனின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாஞ்சாலக்குறிச்சி, தம்பி உள்ளிட்ட படங்களை இயக்கியவர் இயக்குநர் சீமான். விடுதலைப்புலிகளின் தீவிர ஆதரவாளரான இவர், இராமேஸ்வரத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு பேசிய பேச்சுகள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தின. இதுதொடர்பாக கியூப்பிரிவு பொலிஸார் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர். தற்போது சீமான் பிணையில் வெளிவந்துள்ளார்.

இந்த நிலையில் வளசரவாக்கம் வெங்கடேஸ்வரா நகர் மெயின் வீதியிலுள்ள சீமான் வீட்டில் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இதில் இயக்குநர் அமீரும் கலந்து கொண்டார் எனத் தகவல்கள் தெரிவித்தன.

பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி வெகு விமரிசையாக நடைபெற்ற இந்தப் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் முடிவில் பிரியாணி விருந்தும் நடைபெற்றது எனக் கூறப்படுகிறது.

இதில் அப்பகுதியை சேர்ந்த இன்ஸ்பெக்டர் மற்றும் 3 பொலிஸார் சாதாரண உடையில் பங்கேற்று விருந்து சாப்பிட்டனர் எனவும் பரபரப்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப்புலிகளின் ஆதரவு பேச்சுக்காக கைதாகி சிறை சென்று பிணையில் வெளிவந்துள்ள சீமான் வீட்டில் நடைபெற்றுள்ள இந்த பிறந்தநாள் கொண்டாட்டம் பொலிஸார் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மறுக்கிறார் அமீர்



சென்னை, நவ. 29

சீமான் வீட்டில் நடந்த பிரபாகரனின் பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்ளவில்லை என்று இயக்குநர் அமீர் மறுத்துள்ளார்.


அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

சென்னை விருகம்பாக்கத்தில் சீமான் வீட்டில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது எனவும், இதில் நான் உட்பட திரைப்படத் துறையினர் சிலர் கலந்துகொண்டனர் எனவும் செய்தி வெளியாகியுள்ளது.

கட்டாயக் கையெழுத்து தளர்த்தப்பட்ட நிலையில் நான் இன்னமும் மதுரையில் என் வீட்டில்தான் இருக்கிறேன். சென்னைக்கு வர வில்லை. பிரபாகரனின் பிறந்த நாள்விழா வில் கலந்துகொள்ளவில்லை என்றுள்ளது.

# ஆயுதம் ஏந்திய பிரபாவை கடவுளாக ஏற்கத் தயார்!

## நாஞ்சில் சம்பத் முழக்கம்



ஈரோடு, நவ. 29

"ஆயுதம் ஏந்திய பிரபாகரனை கடவுளாக ஏற்றுக் கொள்ளத் தயார்" - என்று ஈரோட்டில் ம.தி.மு.க. கொள்கை விளக்க அணிச் செயலர் நாஞ்சில் சம்பத் முழங்கியுள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் படுகொலையைத் தடுக்கத் தவறிய மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து ஈரோடு கருங்கல்பாளையத்தில் ம.தி.மு.க. பொதுக்கூட்டம் நடந்தது.

அதில் பேசியபோதே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

ஈழத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க. அரசுக்கு அக்கறை இல்லை. சிங்களவர்கள், ஈழத் தமிழர்கள் ஒரே கூரையில் வசிக்க முடியாது. சூரபத்மனை வதம் செய்த கடவுள் முருகப்பெருமான், ஆயுதம் ஏந்தித்தான் பிரச்சினையை முடித்தார்.

அதேபோல் ஆயுதம் ஏந்திய பிரபாகரனை கடவுளாக ஏற்றுக்கொள்ள நாங்கள் தயார். உலக நன்மைக்காக போராடுபவர்கள் தேசத் துரோகிகள். தமிழகத்தில் போராடுபவர்களை 'தேசத் துரோகிகள்' என்று கூறுகின்றனர்.

[illegible] ஆயுதங்களை கொடுக்[illegible] என்று கேட்கிறோம். தலை நிமிர்ந்து சொல்கிறேன், 'தனி ஈழம்' என்ற குழந்தை உருவாகும். நாங்கள் பேசினால், தடை செய்யப்பட்ட இயக்கம் குறித்து பேசுகின்றனர் எனக் கூறுகின்றனர்.

அந்தத் தடையை தரை மட்டமாக்குவோம். 'தமிழ் ஈழம்' மலர்ந்தே தீரும்" - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மென்டிஸின் சுழலில் சுருண்டது சிம்பாப்வே!

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான 4ஆவது ஒருநாள் போட்டி நேற்று சிம்பாப்வேயின் கராரேயில் நடைபெற்றது.

இலங்கை நேரப்படி நேற்று பிற்பகல் 1மணியளவில் ஆரம்பமான இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி சிம்பாப்வே அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணியின் ஆரம்ப வீரர்களாக மஸகட்ஸாவும் சிபண்டாவும் களமிறங்கினர். ஆரம்ப விக்கெட்டுக்காக இவர்கள் இருவரும் தமக்கிடையே 46 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த நிலையில் மஸகட்ஸா 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து சிபாபா களம் புகுந்தார். அணியின் ஓட்ட எண்ணிக்கை மேலும் 20 ஓட்டங்களால் அதிகரித்தபோது சிபண்டாவும் 21 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார்.

பின்னர் வந்தவர் சிம்ப்பாப்வே அணியின் விக்கெட் காப்பாளர் தைபு. இவரும் 7 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பி ஏமாற்றம் அளித்தார்.

தொடர்ந்து சிபாபாவுடன் இணைந்து கொண்டவர் மற்ஸிகென்ஜெரி. அவர் வந்த வேகத்திலேயே ஓட்டமெதுவும் பெறாது வெளியேறினார்.

அவரையடுத்து சிக்கும்புரா களம் நுழைந்தார். மறுமுனையில் இருந்த சிபாபாவும் 20 ஓட்டங்களுடன் மென்டிஸினால் பெவிலியன் அனுப்பப்பட்டார். அடுத்து டபென்கா இறங்கினார்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 108 ஆக இருந்தபோது சிக்கும்புரா 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

அவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து அணித்தலைவர் உற்செய்யா களம் புகுந்தார். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய டபென்கா 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் சிம்பாப்வேயின் விக்கெட்டுக்கள் மளமளவெனச் சரியத் தொடங்கின.

அடுத்து வந்த வீரர்களான பிறின்ஸ் 8 ஓட்டங்களுடனும், முப்பரிவா 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இறுதியாக 46.3 ஓவர்களில் 146 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது சிம்பாப்வே அணி.

பந்துவீச்சில் சிறப்பாகப் பந்துவீசிய அஜந்த மென்டிஸ் 6 விக்கெட்டுக்களையும், துஷார 2 விக்கெட்டுக்களையும், தம்மிக பிரசாத், , முபாரக் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.




இந்தியா - இங்கிலாந்து அணிகளிடையே நடக்க இருந்த 6ஆவது மற்றும் 7ஆவது ஒருநாள் போட்டிகள், மும்பையில் நடந்த தீவிரவாத தாக்குதல் காரணமாக ரத்துச் செய்யப்பட்டன. இதையடுத்து, கவுகாத்தி புறப்பட இருந்த இங்கிலாந்து வீரர்கள் தங்கியுள்ள ஹொட்டலுக்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் படையினரைப் படத்தில் காணலாம்.

# ஆஸி. அணியின் முன்னாள் வீரர் மர்மமான முறையில் மரணம்

மெல்போர்ன், நவ. 29

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் பவுல் ஹப்பேர்ட் (வயது 56) அவரது வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

1977 - 78 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆஸி. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக இவர் விளையாடியிருந்தார்.

மெல்போர்னிலுள்ள அவரது வீட்டுக்கு வந்த உறவினர்கள் கடந்த ஒருவார காலமாக அவரைக் காணவில்லை என்று அதிர்ச்சியடைந்தனர். பின்னர் அவரது வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்று பார்த்தபோது அவர் சடலமாகக் கிடந்தார் என்று கூறப்பட்டது.

இவரது மர்ம மரணம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவரது மரணத்துக்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் வீரர்கள், முன்னாள் வீரர்கள் அனுதாபம் தெரிவித்திருக்கின்றனர்.

# ஆஸியுடனான டெஸ்ட்டில் நியூஸிலாந்து அணி 262/6

அவுஸ்திரேலியா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி அடிலெய்டில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி அதன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய ரெட்மண், கௌப் ஆகியோர் முதலாவது விக்கெட்டுக்காக தமக்கிடையே 46 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

16 ஓட்டங்களுடன் கௌப் ஜோண்சனின் பந்தில் வெளியேறினார். தொடர்ந்து வந்த ரைடர் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் ரெய்லர் வந்தார்.

எனினும் மறுமுனையில் தனது அதிரடியான துடுப்பாட்டத்தின் உதவியுடன் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டிருந்த ரெட்மண் 2 சிக்ஸர்கள், 14 பவுண்டரிகள் அடங்கலாக 83 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து சென்றார்.

பின்னர் ரெய்லருடன் இணைந்துகொண்டவர் புல்டன். இந்த ஜோடி ஓரளவு நிதானமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியது. இருவரும் தமக்கிடையே 64 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

இந்நிலையில் புல்டன் 1 சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 29 ஓட்டங்களைப் பெற்று பெவிலியன் திரும்பினார். அடுத்து பிளைன் களமிறங்கினார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 200 ஆக இருந்தபோது திறமையாகத் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த ரெய்லர் 44 ஓட்டங்களுடன் ஆடட்மிழந்து, 6 ஓட்டங்களால் தனது அரைச்சதம் பெறும் வாய்ப்பை நழுவவிட்டார்.

அவரையடுத்து நியூஸிலாந்து அணியின் விக்கெட் காப்பாளர் மக்கலம் வந்தார். அப்போது 11 ஓட்டங்களுடன் பிளைனை தனது வேகத்தினால் வெளியேற்றினார் பிரெட் லீ.

பின்னர் மக்கலத்துடன் ஜோடி சேர்ந்தார் அணியின் தலைவர் விற்றோரி. இந்த ஜோடி ஓரளவு நிதானத்துடன் தமது ஆட்டத்தைத் தொடர்ந்தது.

நேற்றைய முதலாம் நாள் ஆட்டம் நிறைவடையும் போது நியூஸிலாந்து அணி 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 262 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மக்கலம் 30 ஓட்டங்களுடனும், விற்றோரி 12 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் கௌரிட்ஸ் 2 விக்கெட்டுக்களையும், பிரெட் லீ, ஜோண்சன், ஸ்ருவேர்ட் கிளார்க், சைமண்ட்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடரும்.

# சம்பியன்ஸ் லீக் போட்டியை வேறிடத்துக்கு மாற்றலாம்!

## பொண்டிங் கருத்து



மெல்போர்ன், நவ. 29

மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய பயங்கர தாக்குதலைத் தொடர்ந்து, சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 போட்டியை வேறு நாட்டில் நடத்தலாம் என ஆலோசனை தெரிவித்துள்ளார் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங்.

7 அணிகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 போட்டி இந்தியாவில் 3 இடங்களில் டிசெம்பர் 3ஆம் திகதி முதல் நடைபெற இருந்தது. மும்பை தாக்குதலைத் தொடர்ந்து அப் போட்டி ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் இறுதிப் போட்டி சென்னையில் டிசெம்பர் 10ஆம் திகதி நடைபெற இருந்தது.

மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலால் பல்வேறு நாடுகளின் வீரர்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். இருந்தாலும் அப்போட்டி நடைபெறுவதை ஒவ்வொரு வீரரும் ரசிகர்களும் விரும்புகின்றனர். ஆதலால் வேறு நாட்டில் அப் போட்டியை நடத்துவது குறித்து ஆலோசிக்கலாம் - என பொண்டிங் தெரிவித்துள்ளார்.




# ஐ.சி.எல். ருவென்ரி 20 போட்டியில் பாகிஸ்தான் லெவன் அணி வெற்றி

ஐ.சி.எல்., 'ருவென்ரி-20' தொடரில் பாகிஸ்தான் லெவன் அணி, உலக லெவன் அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.,) சார்பில் வேல்டு சீரிஸ் 'ருவென்ரி-20' தொடர் அகமதாபாத்தில் நடக்கிறது.

4ஆவது லீக் போட்டியில் பாகிஸ்தான், உலக லெவன் அணிகள் மோதின. முதலில் களமிறங்கிய உலக லெவன் அணி 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 188 ஓட்டங்கள் எடுத்தது. டேமியன் மார்டின்(64), குட்வின்(54) ஆகியோர் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் லெவன் அணி 17.5 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 191 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வெற்றிக்கு உதவிய நவீத்-உல்-ஹசன் (74), அப்துல் ரசாக்(73) ஆகியோர் ஆட்ட நாயகர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

# இந்திய அணியை எப்படி வீழ்த்துவது...?

## இங்கிலாந்து அணித் தலைவர் பீற்றர்சன் குழப்பம்

கட்டாக், நவ. 29

இந்திய அணியின் தொடர் வெற்றி குறித்து இங்கிலாந்து அணித் தலைவர் பீற்றர்சன் கூறியதாவது,

டெஸ்ட் தொடரில் உலகின் முதல்தர அணியான அவுஸ்திரேலியாவை வீழ்த்தியதால், இந்திய வீரர்கள் மனரீதியாக வலுவடைந்துள்ளனர். இதனால், எங்களுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இந்தியா மிக எளிதாக வெற்றி பெற்று வருகிறது. இந்திய அணியின் வெற்றியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால், அதற்கான வழி எது என்று தெரியவில்லை.



இந்திய அணியில் எல்லா வீரர்களும் தைரியமாக, அதேநேரத்தில் பதற்றமின்றி விளையாடி அணியை வெற்றி பெறச் செய்கின்றனர். இந்த மாதிரி வலுவான அணியை வீழ்த்த ஆசைப்படுகிறேன்.

270 ஓட்டங்களை எடுத்தும் தோற்றுவிட்டீர்களே என்று கேட்கின்றனர். 300ஓட்டங்களுக்கு மேல் எடுத்திருந்தாலும் இந்தியா எளிதாக வென்றிருக்கும். துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என எல்லா வகையிலும் அபாரமாக செயல்படுவதால், இந்திய அணி விரைவில் முதல் இடத்தைப் பிடிக்கும்.

இவ்வாறு பீற்றர்சன் கூறினார்.

கட்டாக் போட்டி குறித்து இந்திய அணித் தலைவர் டோனி கூறியதாவது, ஆட்டத்தின் எந்தக் கட்டத்திலும் எங்கள் வெற்றி குறித்து சந்தேகப்படவில்லை.

இங்கிலாந்து அணியில் உள்ள மூன்று வேகப்பந்து வீச்சாளர்களும் தொடர்ச்சியாகப் பந்துவீசி தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஓவர்களைப் பூர்த்தி செய்துவிட்டதை நாங்கள் உணர்ந்திருந்தோம்.

அடுத்து அவர்கள் சுழற்பந்துவீச்சை தொடங்கியாக வேண்டும் என்ற நெருக்கடி இருந்தது. ஓவருக்கு 5 ஓட்டங்களுக்கும் குறைவாகவே தேவைப்பட்ட நிலையில், ஒரு பவர்பிளே இன்னும் மிச்சம் இருந்ததால் கவலை இல்லாமல் விளையாடினோம். இவ் [illegible] ளார்.

# காலிறுதியில் சாய்னா



ஹொங்கொங் சூப்பர் சீரிஸ் பட்மின்டன் தொடரின் காலிறுதிக்கு இந்திய வீராங்கனை சாய்னா நேவல் முன்னேறியுள்ளார்.

உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் ஹொங்கொங் சூப்பர் சீரிஸ் பட்மின்டன் தொடர் ஹொங்கொங்கில் நடக்கிறது.

நேற்றுமுன்தினம் நடந்த பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றுப்போட்டியில் இந்தியாவின் சாய்னா நேவல், கொரியாவின் யூன் ஜோ பெயியை சந்தித்தார். விறுவிறுப்பான போட்டியில் முதல் செட்டை சாய்னா 21-15 என கைப்பற்றினார்.

இரண்டாவது செட்டில் கொரிய வீராங்கனை 21-12 என பதிலடி தந்தார். 3ஆவது செட்டில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சாய்னா 21-13 என தன்வசப்படுத்தினார். இறுதியில் சாய்னா 21-15, 12-21,, 21-13 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பை குண்டுத்தாக்குதல்களுக்கு அரசும் எதிர்க்கட்சிகளும் கண்டனம்

கொழும்பு, நவ.29

மும்பை குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு அரசும் எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து நேற்று நாடாளுமன்றில் பலத்த கண்டனங்களைத் தெரிவித்தன.

இந்தியாவில் மாத்திரமன்றி இலங்கை உட்பட உலகம் முழுவதிலும் வியாபித்திருக்கும் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக்கட்ட உலகநாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவை வேண்டுகோள் விடுத்தன.

அரசின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இக் கண்டனத்தைத் தெரிவித்து விசேட உரை ஒன்றை ஆற்றினார். அவர் அப்போது கூறியவை வருமாறு :-

இந்தியாவின் முக்கிய பொருளாதார நகரமான மும்பை நகரில் பயங்கரவாதிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தி வருகின்றனர். இது குறித்து நாம் மிகவும் வேதனைப்படுகிறோம்.

எமது அரசினதும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினதும், நாட்டு மக்களினதும் அனுதாபத்தை இந்திய அரசுக்கும் இந்திய மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பயங்கரவாதிகள் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவதற்காகவும், பேரழிவை ஏற்வடுத்துவதற்காகவுமே இவ்வாறான காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களை நடத்துகின்றனர்.

இத்தாக்குதல் புலிக்ளின் தாக்குதலுக்கு ஒப்பானது. இந்தியாவில் பயங்கரவாதத்தை ஒழிகக இலங்கை இந்தியாவுக்கு முழு ஆதரவையும் வழங்கும் - என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியவை வருமாறு :-

மும்பை குண்டுவெடிப்புச் சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதைக் கண்டிப்பதோடு மாத்திரம் நாம் நின்றுவிடக்கூடாது.

பயங்கரவாதத்தை முற்றாக முறியடிக்க நாம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். பயங்கரவாதத்தின் வடிவத்திற்கு ஏற்ப வெவ்வேறு முறைகளைப் பயன்படுத்தி அதை ஒழிக்க வேண்டும் - என்றார்.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் கூறியவை வருமாறு :-

மும்பை குண்டுவெடிப்புச் சம்பவத்தை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தச் சம்பவம் மூலம் உலகில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும் என்ற கோஷம் வலுப்பெறுகிறது - என்றார். (அ-சி)

# வெள்ளம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்த தடைகளை அகற்றும் பணி தீவிரம்

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்.நகரத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வெள்ளம் தேங்குவதற்குக் காரணிகளாக இருந்த தடைகள் அகற்றும் பணிகள் நேற்று பெரிய அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன; தீவிரமாக்கப்பட்டுள்ளன.

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வெள்ளப் பாதிப்பு புனரமைப்பு தொடர்பாக நடத்தப்பட்ட நேற்றைய கூட்டத்தில் திணைக்களத் தலைவர்களும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட பாதிப்புக்கள் தனித்தனியே ஆராயப்பட்டன.

இக் கூட்டம் தொடர்பாக அரச அதிபர் தெரிவித்த ஏனைய தகவல்கள் வருமாறு:

* வெள்ளம் வடிந்து ஓடுவதற்கு தடையாக இருந்த தடைகளை அகற்றும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.
* நேற்று மாலை கிடைத்த தகவல்களின் பிரகாரம் குடாநாட்டில் 73,523 குடும்பங்களைச் சேர்ந்த 268,031 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் 17, 632 குடும்பங்கள் 251 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை ஆறு மரணங்கள் பதிவாகியுள்ளன.6,689 வீடுகள் முழுமையாக சேதமடைந்தன. 14,824 வீடுகள் பகுதியாகச் சேத மடைந்துள்ளன.

* அத்தியாவசிய சேவைகளான மின்சாரம், தொலைபேசி, சுகாதார சேவை ஆகியன முன்னுரிமை அடிப்படையில் சீராக்கப்பட்டு வருகின்றன.
* அரச திணைக்களங்களும் அரச சார்பற்ற அமைப்புகளும் இணைந்து செப்பனிடும் பணிகளை முன்னெடுத்து வருகின்றன.
* உணவு போதியளவு கையிருப்பில் உள்ளது. காங்கேசன் துறையில் மூன்று கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன. (அ-1)

## தென்மராட்சி பிரதேச கிராம சேவையாளர்களுக்கு

யாழ்ப்பாணம், நவ. 29

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் பணியாற்றும் சகல கிராம சேவையாளர்களையும் இன்று சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு அலுவலகத்துக்கு வருமாறு பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (1)

# நேற்று முதல் யாழ்.போதனா வைத்தியசாலையில் இரு பிரிவுகள் தவிர்ந்த ஏனையவை இயங்க ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.29

கடந்த சில தினங்களாக யாழ்.குடாநாட்டில் பெய்த கடும் மழையினால் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஸ்தம்பிதமடைந்த வைத்திய சேவைகளில் மூளை மின்னலைப் பிரிவு (EEG), இயன் மருத்துவ பிரிவு (DPM) தவிர்ந்த ஏனைய சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன.

மேற்படி இரு வைத்தியப் பிரிவுகளின் இயந்திரப் பகுதிகளின் அறை மற்றும் வெளிப்பகுதிகளில் தற்போதும் வெள்ளம் நிறைந்து காணப்படுகின்றது. இதனால் மேற்குறித்த வைத்திய சேவைகளைநோயாளிகள் பெறமுடியவில்லை.

இயந்திரப் பகுதிக்குள் வெள்ளம் சென்ற படியால் மூளை மின்னலைப் பிரிவு இயந்திரங்கள் இயங்கவில்லை.

இதேவேளை இந்த வைத்திய சேவையின் தேவைக்குப் பயன்படுத்தப்படும் பதிவுத் தாள்களும் (Record Paper) சேதமுற்று இருப்பதால் வெள்ளம் வடிந்த பின்பும் உடனடியாக இந்த சேவைகளை ஆரம்பிப்பதில் தடங்கல் ஏற்படலாமென சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

மூளை மின்னலைப் பிரிவு வைத்திய சேவை வடமாகாணத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையிலேயே நடைபெறுவதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை வைத்தியசாலைக்கு மின்விநியோகம் வழமைக்கு திரும்பியுள்ளது. நீர் வழங்கல் சேவையை சீரமைப்பதற்கு நீர்வழங்கல் அதிகார சபை, மின்சாரசபை, வைத்தியசாலை ஊழியர்கள் இணைந்து ஏற்பாடுகளை செய்துவருகின்றனர். இதற்குத் தேவையான நீர்ப்பம்பி, நீர்க்குழாய்களை செஞ்சிலுவைச்சர்வதேசக் குழு வழங்கி உதவியிருக்கிறது. (249)

## தனிமையில் இருந்த மூதாட்டி வாள் வெட்டுக்கு இலக்காகி மரணம்

தொல்புரம், நவ. 29

சுழிபுரம் கிழக்கு, வீரபத்திரர் கோயிலடியில் வீட்டில் தனித்திருந்த மூதாட்டி ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி மரணமானார்.

அதே இடத்தைச் சேர்ந்த கதிரவேலு பாக்கியம் என்ற மூதாட்டியே மரணமானவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அவர் வீட்டில் இருந்த வேளை இனந் தெரியாதவர்கள் அங்கு சென்று அவரை வெட்டிவிட்டுத் தப்பிவிட்டனர்.

தலையில் காயத்துக்குள்ளான மூதாட்டி மயக்கநிலையில் மறுநாள் அயலவர்களால் மீட்கப்பட்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சை பயனளிக்காத நிலையில் செவ்வாய்க்கிழமை அவர் மரணமானார்.

அவரது வீட்டில் இருந்து எந்தப் பொருளும் திருடப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-119)

## காணவில்லை



படத்திலுள்ள வை.கைலாயநாதன் என்பவர் கடந்த 26.11.2008 புதன் கிழமை முதல் காணாமற் போயுள்ளார். இவர் ஒரு மன நோயாளி. அன்றைய தினம் நீலநிறச் சாரம் அணிந்திருந்தார், ஒரு பல்லு மிதப்பானவர், 50 வயது மதிக்கத்தக்கவர்.

இவரைக் கண்டவர்கள் தயவு செய்து கீழுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்

கூளாவடி கிழக்கு,
ஆனைக்கோட்டை (சந்தி).
தொ.பே. 0777448076, 0771386124

தகவல்:
வை.வீரலட்சுமி
(தங்கை)

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ-து

சகல பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கும்,

2008.11.30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த எமது சங்க வருடாந்த பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இது பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்
தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்.

## மாநகரசபை பகுதியில் காலை ஒரு மணிநேரமே குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 29

மின் தடை தொடர்வதால், யாழ்.மாநகரசபை எல்லைக்குள் இன்று முதல் மறு அறிவித்தல் வரை காலை ஒரு மணிநேரம் மட்டும் குடி தண்ணீர் விநியோகம் இடம் பெறும் என்று மாநகரசபை செயலாளர் இ.இரத்தினசிங்கம் அறிவித்துள்ளார். (1)

## சீயோன் தேவாலயம்

**ஆராதனை இடம் மாற்றம் பற்றிய அறிவித்தல்!**

இல 24, இராமையாச் செட்டியார் ஒழுங்கையில் அமைந்துள்ள சீயோன் தேவாலய தலைமைச் சபையில் (30.11.2008) ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறும் ஆராதனை நடைபெறமாட்டாது. பதிலாக இல 347, நாவலர் வீதியில் அமைந்துள்ள சீயோன் தேவாலய தலைமைப் போதகர் இல்லத்தில் (இலுப்பையடிச்சந்தி) ஞாயிறு காலை 9.00- 10.30 மணிவரை ஞாயிறு ஆராதனை நடைபெறும்.

சிறுவர் ஞாயிறு பாடசாலை நடைபெறமாட்டாது என்பதனையும் ஆராதிக்கும் சகல சீயோன் சபை விசுவாசிகளுக்கும் அறியத்தருகின்றேன்.

ஜே.கே.பிலிப்
தலைமைப் போதகர்.

## பாதிக்கப்பட்ட மாணவர்கள் விபரங்களைப் பதிய அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.29

க.பொ.த. சாதாரண தரம் டிசெம்பர் 2008 ற்கு தோற்றவிருக் கும் யாழ்ப்பாணக் கல்வி வலய மாணவர்கள் தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டிருப்பின் தமது தேவைகளை தமது பாடசாலை அதிபரூடாக நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லமுத்து முத்தையா



இராமகிருஷ்ண வீதி, கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லமுத்து முத்தையா 27.11.2008 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம், கனகாம்பிகை, கமலா, தர்மபூபதி, மனோரஞ்சிதம், பத்மநாதன், நீலாவதி, பாலகிருஷ்ணன், தவமலர், காலஞ்சென்ற நடேசலிங்கம் மற்றும் தவராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், தவமலர், சந்திரசேகரம், சண்முகரத்தினம், காலஞ்சென்ற நடராசா மற்றும் மனோரஞ்சிதம், ஜெயலட்சுமி, துரைவீரசிங்கம், குமுதினி, செல்வநாயகம், சிவானந்தன் (சிவா பிறதேர்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கிழக்கு, கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமகிருஷ்ண வீதி,
கோண்டாவில் கிழக்கு.
தொ.பே. 021 222 6805, 0779116045

தகவல்: பாலகிருஷ்ணன்,
பாலசுப்பிரமணியம்,
பத்மநாதன் (பிள்ளைகள்)

### திருமதி சிவபாக்கியம் கதிரவேலு

(மலேசியா ஓய்வூதியர், கல்வீட்டுப் பாக்கியம்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கதிரவேலு 24.11.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற, மகேஸ்வரியின் பாசமிகு மாமியாரும் கதிர் (லண்டன், பொறியியலாளர்) அவர்களின் பேர்த்தியாரும் திருமதி கதிர்- நளினரஞ்சினியின்(ரூபி) பாசமிகு பேர்த்தியும், துவாரகாவின் பூட்டியும், மீனாம்பிகை- ஆறுமுகம் (மலேசியா), கந்தையா நடராசா(மலேசியா), கந்தையா இரத்தினசிங்கம்(மலேசியா) சுபத்திரா தேவி சிவசுப்பிரமணியம் (மலேசியா), இரஞ்சிதம் நாகராஜா(சுழிபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2008) சனிக்கிழமை ந.ப 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

தகவல் :
இரஞ்சிதம்- நாகராசா
(சகோதரி)

### விஜயரட்ணம் விஜயகணபதி

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் செட்டிச்சோலை, அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரட்ணம் விஜய கணபதி நேற்று (28.11.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம்- சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2008) சனிக்கிழமை பி.ப. 1மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டிச் சோலை,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல் :
ந.நல்லலிங்கம்
மைத்துனர்(C.T.B)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் வியாழனன்று மூவர் கொலை

மட்டக்களப்பு, நவ.29

மட்டக்களப்பு மாவட்டத்தில் வியாழக்கிழமை இரவு வெவ்வேறு இடங்களில் இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் மூவர் கொல்லப்பட்டனர். 60 வயதுடைய வயோதிபப்பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

காத்தான்குடி, தளாங்குடா, பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் அருளானந்தம் விஜயகுமார் (வயது 27) என்பவர் சூட்டுக் கொல்லப்பட்டார். அந்த துப்பாக்கி சூட்டில் அவரது 60 வயதுடைய தாயாரும் படுகாயமடைந்தார்.

களுவாங்கேணிப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் நோர்வேயின் அகதிகள் சபையின் பணியாளரான எ. விக்கினேஸ்வரன் (வயது 27) என்பவரை சுட்டுக்கொன்றுள்ளனர்.

அப் பகுதியில் இடம்பெயர்ந்து வசிக்கும் மக்களின் குடியிருப்புக்களுக்கு அருகில் வைத்தே அவரை ஆயுததாரிகள் சுட்டு கொன்றுள்ளனர்.

அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் வாழைச்சேனை,பேத்தலைப் பகுதியில் கே.ரமேஸ் (வயது33)என்பவரும் இனந் தெரியாத நபர்களால் சுட்டு கொல்லப்பட்டார்.

அவரது வீட்டிற்குள் புகுந்த துப்பாக்கி தாரிகள் அவர் மீது சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்த்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கடந்த மூன்று நாள்களில் மட்டக்களப்பில் 26பேர் ஆயுததாரிகளால் சுட்டு கொல்லப்பட்டனர். எனினும் இதுவரை பொலிஸாரினால் எவரும் கைது செய்யப்படவில்லை. (அ-சி)

# ஓமந்தைச் சாவடி நேற்றுத் திறப்பு

கொழும்பு, நவ. 29

கடந்த சிலதினங்களாக தடைப்பட்டிருந்த ஓமந்தை சோதனை நிலையம் ஊடான மக்கள் போக்குவரத்துக்கள் நேற்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளன என வவுனியா அரச அதிபர் தெரிவித்தார்.

இராணுவச் சோதனைச்சாவடியைக் கடந்து செல்லும் பொதுமக்களுக்கு, புளியங்குளம் பகுதியிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் வழித்துணை வழங்கி வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து வன்னிப்பகுதிக்குச் செல்லமுடியாமல் வவுனியாவில் தங்கியிருந்த பலர் நேற்று தமது பிரயாணத்தை மேற்கொண்டனர் எனவும் கூறப்படுகின்றது.

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து ஆயுதக்குழுக்கள் தேர்தலில் போட்டியிட்டிருந்தன. அதன் மூலம் கிழக்கை அபிவிருத்தி செய்யலாம் என்றும் அவர்கள்நம்பினர். ஆனால் எதுவுமே நடக்கவில்லை.

இன்று கொலை, ஆள்கடத்தல், காணாமற்போதல், அச்சுறுத்தல் போன்ற நடவடிக்கைகளே இடம்பெற்று வருகின்றன. இது கவலை தருகின்றது - என்றார். (அ-சி)

## பயங்கரவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேபாளத்தில் ஏற்பட்ட ஆயுதப் போராட் டம் அரசியல் தீர்வின் ஊடாகத் தீர்க்கப்பட்டது.

ஆப்கான் பயங்கரவாதம் இராணுவத்தினரின் ஊடாகத் தோற்கடிக்கப்பட்டும் அது மீண்டும் தலைதூக்கி உள்ளது.

ஆகவே பயங்கரவாதத்தை இராணுவத் தீர்வால் மாத்திரம் தோற்கடிக்க முடியாது. அரசியல் தீர்வு, பொருளாதாரத் தீர்வு மற்றும் சமூகத் தீர்வு போன்றவற்றின் ஊடாகவே அதனைத் தோற்கடிக்க முடியும்.

இந்தியாவின் மும்பை நகரில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் மிக மோசமான பயங்கரவாதச் செயலாகும். இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இதை முஸ்லிம்களே செய்தனர் என்று கூறிக்கொண்டு இந்திய அரசு இனவாதத்தைத் தூண்ட வில்லை.

எல்லோரும் இந்தியர்கள் என்ற அடிப்படையில் சட்ட ஒழுங்கை சரியாகப் பின்பற்றியே இப்பிரச்சினையை இந்தியா அணுகியது. இதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும் - என்றார். (அ-சி)

## பிரபாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மும்பைக் குண்டுவெடிப்புச் சம்பவத்தைக் கண்டித்து நேற்று நாடாளுமன்றில் உரை யாற்றியபோதே அமைச்சர் போகொல்லாகம இதனைக் கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

புலிகள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்தனர். இப்போது பழையவற்றை மறந்து இந்தியாவுடன் மீண்டும் உறவை ஏற்படுத்த புலிகளின் தலைவர் பிரபாகரன் முயற்சிக்கிறார்.

அவர் 27ஆம் திகதி ஆற்றிய மாவீரர் தின உரையில் இந்தியாவுடன் உறவைப் புதுப்பிக்க நேசக்கரம் நீட்டுகிறார். இந்தியா இந்த அழைப்பை பாரபட்சமின்றி நிராகரிக்கும்.

ராஜீவ் காந்தியைக் கொலைசெய்த புலிகளுடன் இந்தியா உறவை ஏற்படுத்தும் என்று நாம் நம்பவில்லை.

ராஜீவ் காந்தி எமது நாட்டின் இறைமையைப் பாதுகாக்க முழு ஆதரவு வழங்கியவர். அதேபோல் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையையும் நிராகரித்தவர்.

இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள புலிகள் மீதான தடையை நீடிப்பதற்கும் மத்திய அரசு தீர்மானித்துள்ளது. மத்திய அரசின் இந்தத் தீர்மானத்தை இந்திய உயர் நீதிமன்றம் கவனத்தில் எடுத்துள்ளது.

புலிகள் தமிழ் நாட்டில் இருந்துதான் பெற்றோல், டீசல் மற்றும் மருந்துப் பொருள்கள் போன்றவற்றை இங்கு கடத்தி வருகின்றனர். இதையும் மத்திய அரசு ஒப்புக்கொள்கிறது.

எமது படையினர் இப்போது கிளிநொச்சியை நெருங்கிக்கொண்டிருக்கின்றனர். புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு அமைதிப் பேச்சுக்கு வரவேண்டும் என்று ஜனாதிபதி கூறியிருப்பதை நான் மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன் - என்றார்.

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றப்பட்ட இந்தப் பொருள்கள் செவ்வாய்க்கிழமை அனுப்பி வைக்கப்பட்ட போதி லும், புளியங்குளத்திற்கு அப்பால் நெடுங்கேணி வீதி போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் பாதிக்கப்பட்டிருந்ததனால், பயணத்தை மேற்கொள்ள முடியாமல் அவை திரும்பி வந்தன.

நேற்றுக் காலை வரை இந்த லொறிகள் இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்பில் வவுனியா உணவுக் களஞ்சிய வளவுக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. சில தினங்களாகப் புளியங்குளம், நெடுங்கேணி வீதியில் தடைப்பட்டிருந்த போக்குவரத்து நேற்றுக் காலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து, இந்த உணவு லொறிகள் கிளிநொச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று அதிகாரிகள் கூறினர்.

அதேவேளை, இந்தியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டு, களனியில் உள்ள உணவுக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த உதவி உணவுப் பொருள்களின் இரண்டாவது தொகுதி 38 லொறிகளில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் நேற்றுமுன்தினம் வவுனியாவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன என வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

களனியில் உள்ள மிகுதி பொருள்களும் அடுத்தடுத்த தினங்களில் வவுனியாவுக்குக் கொண்டு வரப்படும் என்றும், இந்த நிவாரண உதவிகள் இன்னும் இரண்டொரு தினங்களில் வன்னிப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என அவர் மேலும் கூறினார். (அ-சி)

## பொத்துவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.50 மணியளவில் ஊடுருவி தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட சிறப்பு அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டனர்.

இதேவேளை, இது குறித்து படைத்தரப்புத் தகவல்கள் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை வெளியாகவில்லை.

## பயணிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல் சேவை மீண்டும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவிருக்கின்றது.

காலநிலை சீரில்லாத காரணத்தால் கடந்த 19 ஆம் திகதி தொடக்கம் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

திருகோணமலையில் இருந்து இன்று புறப்படும் கப்பல் நாளை காங்கேசன்துறையில் இருந்து பயணிகளை ஏற்றிச் செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-151)

## விடுதலைப்புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திய உள்துறை வட்டாரங்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

1992இல் முதன்முதலில் அமுல்படுத்தப்பட்ட தடை சில வாரங்களுக்கு முன்னர் மீண்டுமொருமுறை, இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதால், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்த கேள்விக்குப் பதிலளிக்க வேண்டிய தேவை எழவில்லையென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருட உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் இந்தியா மீது குற்றச்சாட்டுகள் எதனையும் சுமத்தாததைச் சுட்டிக்காட்டியுள்ள அதிகாரிகள், அதே வேளை பிரபாகரனின் கருத்துகளை சமீபத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளின் அடிப்படையிலேயே நோக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்தியா நீக்குவதென்ற பேச்சிற்கே இடமிருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தியை விடுதலைப்புலிகளின் உறுப்பினர் ஒருவர் கொலை செய்த பின்னரே இந்தியா அவர்களைத் தடை செய்தது எனக் கருதுவது தவறு எனச் சுட்டிக்காட்டியுள்ள இந்திய உள்துறை அதிகாரிகள், இலங்கை அரசு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கையாளும் வழிமுறைகள் குறித்து இந்தியாவிற்கு மாறுபட்ட கருத்துகள் இருந்தாலும் தமது நாடு விடுதலைப்புலிகளிடமிருந்து சற்று தள்ளியிருக்கவே விரும்புகின்றது என்றும் உள்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-சி)

## 20 ஆண்டுகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி தனது மூன்று பெண் பிள்ளைகளையும் கிணற்றில் வீசி கொலை செய்தார் என சட்டமா அதிபரால் இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.

கடந்த 13 ஆம் திகதி ஏழு பேர் கொண்ட ஜூரீர் சபை முன்பாக வழக்கு விசாரணை ஆரம்பமாகியது. ஜூரர்கள் ஏழுபேரும் வழக்கின் எதிரி குற்றவாளி என்று ஏகமனதாக நீதிபதியிடம் தெரிவித்தனர்.

பிரஸ்தாப நபர் சம்பவ தினம் வீட்டுக்கு இரவு சென்றபோது அவரது மனைவியும் வேறு நபரும் ஒன்றாக பாலியல் வல்லுறவில் ஈடுபட்டதை கண்டதாகவும் -

அதன் பின்னர் தனது மூன்று பிள்ளைகளையும் கிணற்றில் வீசி தானும் கிணற்றில் குதித்ததாகவும் -

பின்னர் அவர் மீட்கப்பட்ட போதும், மூன்று பிள்ளைகளும் உயிரிழந்து விட்டதாகவும் - வழக்கு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் எதிரி சார்பில் சட்டத்தரணி கே.பி.எஸ்.வரதராஜா ஆஜராகியிருந்தார். அரச சட்டத்தரணி எஸ்.சூசைதாசன் வழக்கை நடத்தினார்.

1987 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலத்தில் யாழ். மேல் நீதிமன்றத்தில் குற்றவாளிகள் எனக் காணப்படுவோருக்கு,மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டு வந்தது. மீண்டும் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ். மேல் நீதிமன்றம் யாழ்ப்பாணத்தில் இயங்கிய போதிலும், 20 வருடங்களின் பின்னரே வழக்கு ஒன்றில் மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். (அ-1)

# விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டது

வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி அடுத்தமாதம் 25ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என யாழ்.வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார்.

விண்ணப்ப முடிவு திகதி இ[illegible] முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ப)

## மும்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் கொமாண்டோ படையின் கறுப்பு பூனைப் பிரிவு வீரர்கள் தாஜ் ஹோட்டலுக்குள் அதிரடியாக நுழைந்து ஒவ்வொரு அறையாக தேடி, சோதனை நடத்தி தீவிரவாதிகளை வேட்டையாடினார்கள். அங்கு 7 தீவிரவாதிகள் சுட்டுவீழ்த்தப்பட்டனர். 3 தீவிரவாதிகள் குண்டுக் காயங்களுடன் மேல் மாடிக்கு தப்பி ஓடினார்கள்.

அந்த 3தீவிரவாதிகளையும் உயிருடன் பிடிக்க கொமாண்டோ வீரர்கள் முடிவு செய்தனர். அதன்படிநேற்றிரவு அந்த 3 தீவிரவாதிகளும் பிடிபட்டனர். அவர்கள் மூவரும் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள்.

அதில் ஒருவர் பெயர் அஜ்மல் அமீர்கமால் என்று தெரியவந்துள்ளது.பாகிஸ்தானின் முல்தான் நகர் அருகே உள்ள பரிட்காட் என்ற ஊரைச் சேர்ந்தவர்கள். இந்த 3 தீவிரவாதிகளும் லஷ்கர் இதொய்பா இயக்கத்தின் கற்கொலைப் படையைச் சேர்ந்தவர்கள். (அ

(முன்னர் வந்த செய்தி 13 ஆம் பக்கத்தில்)

## கிழக்கு கொலைகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினர்கள் எனப் பலரும் நேற்றுக் காலை முதல் மாலை வரை ஒன்று கூடி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மைக்கால படுகொலைகளுடன் தொடர்புடைய நபர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

மாநகர முதல்வர் சிவகீதா பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் அங்கு வருகை தந்திருந்த கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் கோரிக்கைகளை வலியுறுத்தும் மகஜர் ஏற்பாட்டாளர்களினால் கையளிக்கப்பட்

இப்படியான படுகொலைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது என மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன் குறிப்பிட்டார். (அ-சி)

## அமைச்சர் பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் கொள்வனவு சம்பந்தமாகச் செய்துள்ள 'ஹெட்ஜிங்' ஒப்பந்தம் தொடர்புடைய வங்கிக் கொடுப்பனவுகள் அனைத்தையும் வழக்கு முடிவடையும் வரை நிறுத்தும்படி உத்தரவிட்ட உயர்நீதிமன்றம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சை ஜனாதிபதியையும், பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பதில் தலைவர் பதவியை திறைசேரிச் செயலாளரையும் பொறுப்பேற்குமாறும் சிபார்சு செய்தது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் இறக்குமதி தொடர்பாக பல்வேறு வங்கிகளுடன் செய்துகொண்டுள்ள 'ஹெட்ஜிங்' ஒப்பந்தத்தால் நாட்டுக்குப் பல்லாயிரம் கோடி ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்டிருந்த இரு அடிப்படை உரிமை மீறல் மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்தபோதே உயர்நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவை விடுத்தது.

பிரதம நீதியரசர் ச[illegible] என் சில்வா, நீதியரசர்கள் கே.ஸ்ரீபவன, பி.ஏ.ரட்ணாயக்கா ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த உத்தரவை விடுத்தது.

இவ்விடயம் சம்பந்தமாக லாவ் நிறுவனத் தலைவர் டபிள்யூ.ஏ.பி.வாசபிட்டிய ஓர் அடிப்படை உரிமை மீறல் மனு[illegible] வண. தினியாவல பாலித நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா, ஊழல் கண்காணிப்பகத்தைச் சேர்ந்த ரவி ஜெயவர்த்தனா ஆகியோர் சேர்ந்து மற்றொரு அடிப்படை உரிமை மீறல் மனுவையும் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பது என நேற்றுத் தீர்மானித்த உயர்நீதிமன்றம் அதையொட்டி மேற்படி இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தது.

இந்த வழக்குகளில் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி, பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் அஸந்த டி மெல், திறைசேரிச் செயலாளர் சுமித் அபேசிங்க, ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சட்டமா அதிபர் ஆகியோர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

முக்கிய அறிவித்தல்

சனி, ஞாயிறு வகுப்புக்கள் நடைபெறமாட்டாது (29ம், 30ம் திகதிகளில்)
01.12.2008 திங்கள் முதல் வழமையான நேர சூசிப்படி வகுப்புக்கள்யாவும் நடைபெறும்.

NEW SCIENCE HALL
JAFFNA.

இன்றும் நாளையும் எவ்வித வகுப்புக்களும் நடைபெற மாட்டா.
நிர்வாகம்.
DMI
ஸ்ரான்லி வீதி, யாழ்.
தாவடி வீதி யாழ்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] காரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org